# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்

**நினைவுப் பேருரை-2016**

# சிவாகம மரபில் திருக்கோயிற் பண்பாடு தொன்மையும் சமகால செல்நெறியும்

**பேருரை வழங்குபவர்**

பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் கலைப்பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**30.09.2016**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்**
# நினைவுப்பேருரை - 2016

# சிவாகம மரபில் திருக்கோயிற் பண்பாடு தொன்மையும் சமகால செல்நெறியும்


**பேருரை வழங்குபவர்**

பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர்

*வாழ்நாள் பேராசிரியர்*

*முன்னாள் கலைப்பீடாதிபதி*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*



# ஆசிச்செய்தி

இந்து சமயத்துக்கும், சமூகத்திற்கும், அந்தண சிவாச்சாரியார் சமூகத்திற்கும் குறிப்பாக கல்வி சமூகத்திற்கும் எனப் பணியாற்றி கலங்கரை விளக்காக இருந்து வழிகாட்டிய பேராசிரியர் கைலாசநாத குருக்கள் அவர்களின் நினைவாக நடாத்தப்படுகின்ற முதலாவது நினைவுப்பேருரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாட் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் "சிவாகம மரபில் திருக்கோவிற் பண்பாடு - தொன்மையும் சமகால செல் நெறியும்" என்னும் தலைப்பில் ஆற்றவுள்ளமையையிட்டு எனது ஆசிச்செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சேர். பொன் இராமநாதன் அவர்களின் கனவாக விளங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பரமேஸ்வராக் கல்லூரியினை அடித்தளமாகக் கொண்டு 1974இல் யாழ்ப்பாண வளாகமாக உருவாக்கப்பட்ட போது மொழிகள் மற்றும் கலாசாரக் கற்கை நெறித்துறையின் பதில்தலைவராக நியமனம் பெற்ற பேராசிரியர் கைலாசநாத குருக்கள் அவர்கள் 1975 இல் முதன் முதலாக உருவாக்கப்பட்ட இந்து நாகரிகத்துறையின் முதற் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் நியமனம் பெற்றார்.

இந்து நாகரிகத்துறையின் புதிய நிலையிலான உருவாக்கத்திற்காக உழைத்த பேராசிரியர் குருக்கள் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலேயே இத்துறையினூடாக முதல் கலைமாணிப் பட்டதாரியையும் முதல் கலாநிதிப் பட்டதாரியையும் குறுகிய காலத்தில் உருவாக்கிய பெருமை தனித்துவமானது. இந்து நாகரிகத் துறையின் பொது சிறப்புக்கலை கற்கை நெறிகளோடு பட்டப்படிப்பின் டிப்புளோமா கற்கை நெறியில் இந்து நாகரிகத்தையும் ஒரு பாடமாக கற்பிப்பதற்குரிய பாடத்திட்டத்தை உருவாக்கிய பேராசிரியர் குருக்கள் அவர்கள் இராமநாதன் நுண்கலைக்கழக நுண்கலைத்துறையின் தலைவராகவும் விளங்கி அக் கற்கை நெறிகளை வளப்படுத்தினார். மானிட பண்பாட்டியல் பீடாதிபதியாக 1976இலும் பதில் கலைப்பீடாதிபதியாக 1978 இலும் நியமனம் பெற்ற

பேராசிரியர் குருக்கள் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முப்பத்தொன்பது வருடங்கள் ஆசிரியப்பணியாற்றி ஓய்வுபெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1991இல் இவருக்கு “வாழ்நாட் பேராசிரியர்” என்ற தகுதியையும், 1998இல் நடைபெற்ற பொதுப் பட்டமளிப்பு விழாவில் “இலக்கிய கலாநிதி” எனும் கௌவரப் பட்டத்தினையும் வழங்கி கௌரவப்படுத்தியது.

தமிழ் மொழி மூலமாக சம்ஸ்கிருத மொழிப் பயிற்சிக்கென “சம்ஸ்கிருத இலகு போதம் i,ii,வடமொழி இலக்கிய வரலாறு (வைதீக இலக்கியம்), சைவத்திருக்கோவில் கிரியை நெறி” ஆகிய நூல்களும் “இந்துப் பண்பாடு சில சிந்தனைகள், விஷேச திரவ்யஹோம மந்திரங்கள், தீபாராதனை வேத மந்திரங்கள், வேத மந்திரங்களின் தொகுப்பு, ஸ்ரீசக்ர பூஜை (தொகுப்பு), சம்ஸ்கிருத கிரந்தாட்சர லகு போதம்” ஆகிய நூல்களும் பேராசிரியர் குருக்கள் அவர்களால் இயற்றப்பட்ட நூல்களிற் சிலவாகும். இவற்றுள் வடமொழி இலக்கிய வரலாறு இலங்கை சாகித்ய அக்கடமி பரிசினைப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பேராசிரியர் குருக்கள் அவர்களை இலங்கைக்கும் சிவாச்சார்ய சமூகத்திற்கும் உயர்வு அளிக்கும் வகையில் சிவநெறிக் கழகமும் சென்னை அழகப்பா கல்லூரியும் இணைந்து “சிவாகமஞான பானு” எனும் பட்டத்தினையும், இலங்கை இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு “வேதாகம மாமணி “எனும் பட்டத்தினையும் வழங்கி கௌரவிக்கப்படுத்தின. இத்தகைய கல்விப்பெருந்தகையின் நினைவுப் பேருரையினை இந்து நாகரிகத்துறையில் பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் வழிகாட்டலில் முதலாவது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றவராகிய முன்னைநாள் கலைப்பீடாதிபதியும் வாழ்நாள் பேராசிரியருமான ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் ஆற்றவிருப்பது மிக பொருத்தமானதான தொன்றாகும் என்றே நான் கருதுகின்றேன்.

**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்,**
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வாழ்நாட் பேராசிரியர்
# இலக்கிய கலாநிதி
# பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள்

யாழ்ப்பாணத்து நல்லூரிற் காசியப கோத்திரத்தில் 21.08.1921 இல் பிறந்து எழுபத்து ஒன்பது வருடங்கள் வாழ்ந்த பேராசிரியர். அமரர் கா. கைலாசநாதக் குருக்கள். சோதிட நிபுணரும், வேதாகமவிற்பன்னரும், நல்லூர் சிவன் கோவிலை நிறுவியவரும், சேர். பொன். இராமநாத வள்ளலின் சமய குருவாகத் திகழ்ந்தவருமாகிய நல்லூர் பிரம்மஸ்ரீ ந. வே. கார்த்திகேயக் குருக்கள் சுந்தரம்மா தம்பதியரின் சீமந்த புதல்வராவார்.

தமது பாடசாலைக் கல்வியை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலை, திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரி ஆகியவற்றிற் கற்ற பேராசிரியர் குருக்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட வைக்கம் பிரம்மஸ்ரீ சிதம்பர சாஸ்திரிகளிடமும், தமது தந்தையாரிடமும், வியாகரண சிரோன்மணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராமசாஸ்திரிகளிடமும் வேதாகம உயர்தர சம்ஸ்கிருதக் கல்வியையும் கற்றார்.

பல்கலைக்கழக அனுமதிபெற்று இலங்கைப் பல்கலைக்கழகத்திற் பேராசிரியர் (Betty Heiman) பெற்றி ஹைமன் அவர்களிடம் சம்ஸ்கிருத மொழியைக் கற்று B.A (Hons) M.A. ஆகிய பட்டங்களையும் இந்தியா பூனே பல்கலைக்கழகத்திற் பேராசிரியர் சு.கூ. தண்டேகார் தலைமையில் இதிகாச புராணங்களில் காணப்படும் சைவம் பற்றியும், தென்பாரதத்திலும் இலங்கையிலும் நிகழும் சைவக் கிரியைகள் பற்றியும் நிகழ்த்திய ஆய்வின் விளைவாக (Ph.D) பட்டமும் பெற்றார். சம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம், இலத்தின், பாளி ஆகிய மொழிகளில் ஆழமாகவும் பிரெஞ்சு, ஜேர்மனியம் ஆகிய மொழிகளில் ஆராய்ச்சிக்கு வேண்டிய அளவிலும் புலமைத்துவம் பெற்றிருந்தார்.

கொழும்பு, இலங்கைப் பல்கலைக்கழகத்திலும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் சம்ஸ்கிருதத்துறையில் விரிவுரையாளராகவும், துறைப்பொறுப்பாளராகவும் விளங்கிய இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறையின் முதற் பேராசிரியராக வும், துறைத்தலைவராகவும் விளங்கினார்.

சம்ஸ்கிருத இலகுபோதம் I, II வடமொழி இலக்கிய வரலாறு, சைவத்திருக்கோவிற் கிரியைநெறி கிரந்தாக்ஷர இலகுபோதம், இந்துப் பண்பாடு சில சிந்தனைகள், என்சரிதம் ஆகியவற்றின் ஆசிரியராகவும், ஸ்ரீசண்டீயக்ஞபத்ததி, ஸ்ரீசக்கர பூஜை ஆகிய நூல்களின் தொகுப்பாசிரியராகவும் விளங்கிய குருக்கள் சிவாகம ஞானபானு, வேதாகமமாமணி என்னும் பட்டங்களை வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர். யாழ். பல்கலைக்கழகத்தினால் வாழ்நாட் பேராசிரியர், இலக்கிய கலாநிதி என்னும் கௌரவப் பட்டங்களைப் பெற்றவர்.

ஸ்ரீவித்தியா குருகுலம், ஸ்ரீமுத்துவிநாயகர் வேதாகம ஆய்வு நிறுவனம் ஆகியவற்றின் இயக்குனராகவும் சேர்.பொன்.இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம் நியந்த்ரீ ஆகியவற்றின் காப்பாளராகவும் விளங்கியவர்.

நல்லூர் சிவன் கோவில்ன் ஆதீனகர்த்தராகவும், நல்லூர் சிவன்கோவில், சிலாபம் ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம் ஆகியவற்றின் பிரதம குருவாகவும் விளங்கிய பேராசிரியர் குருக்கள் அவர்கள் 2000.08.01 அன்று அம்பிகையின் திருவடி நீழலை அடைந்தார்.

# முன்னுரை

இன்றைய நினைவுப் பேருரைக்குரிய எங்கள் மதிப்பார்ந்த பேராசான் பேராசிரியர் இலக்கியகலாநிதி பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் புகழ்பூத்த கல்விமான் ஆவார். இப்பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் முதற் பேராசிரியராகவும் தலைவராகவும் விளங்கியவர். இப்பல்கலைக்கழக முன்னோடிக் கல்விமான்களில் ஒருவராவர் இந்து நாகரிகத்துறையை திறம்பட வழிநடத்தியதன் பயனாய் சிறந்ததொரு மாணவப் பரம்பரையை உருவாக்கிய பெருமைக்குரியவர் சமஸ்கிருதத்திலும் இந்துப்பண்பாட்டுப் பாரம்பரியத்திலும் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாடும் புலமைத்துவமும் உன்னதமானவை. இதன் காரணமாய் இந்து நாகரிகத்துறையினரும் சமஸ்கிருதத்துறையினரும் பேராசான் மீது மதிப்புக் கொண்ட ஏனைய பேராசான்களும் இத்தகைய நினைவுப் பேருரை அப்பேராசானைக் கௌரவிக்கும் வகையில் இப்பல்கலைக்கழகத்தில் இடம் பெற வேண்டுமென விரும்பியிருந்தனர். அதன் பெறுபேறே இந்த நினைவுப்பேருரை.

பேராசான் பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர். அவரது தந்தையார் பிரம்மஸ்ரீ ந. வே. கார்த்திகேயக் குருக்கள் சேர் பொன் இராமநாதனின் சமய குருவாக விளங்கியவர் பேராசிரியர் பல்வேறு பதவிநிலைகளில் உன்னதமான கல்விப் பணியாற்றியவர். இப்பல்கலைக்கழகத்தோடு நீண்டகாலம் கல்விமானாகத் திகழ்ந்ததைக் கௌரவிக்கும் வகையில் இப்பல்கலைக்கழகத்தில் இன்று இந்த நினைவுப்பேருரை முதன் முதலாக நிகழ்வது எமக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. பேராசான் எமது நாட்டில் மாத்திரமின்றி உலகளாவிய நிலையில் மேலை நாடுகளிலும் இந்துப் பண்பாடு சார்ந்த அறிவுப் பரம்பலுக்கு அரிய பணியாற்றியவர். இவரது உன்னத பணிகளை முன்னெடுப்பதற்கு நல்லூர் சிவன் கோவிலைத் தளமாகக் கொண்டு உருவாகிய பேராசிரியர் பிரம்மஸ்ரீ

கா. கைலாசநாதக் குருக்கள் ஞாபகார்த்த சபை இன்றைய நினைவுப் பேருரைக்கு அனுசரனை வழங்குவது குறிப்பிடத்தக்கதாகும் இப்பல்கலைக் கழகத்தில் பேராசிரியருக்குரிய நினைபுப் பேருரை நடைபெற வாய்ப்பளித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மதிப்பார்ந்த துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களுக்கும் கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. ஞானகுமாரன் அவர்களுக்கும் ஏனைய அனைத்துப் பெரியோர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். பேராசிரியருக்கு உவந்த ஒரு தலைப்பில் அமையும் இந்த நினைவுப் பேருரை அப் பெரியாருக்கு நாம் செலுத்தும் உன்னதமான கௌரவமாக அமைவதாகுக.

# சிவாகம மரபில் திருக்கோயிற் பண்பாடு தொன்மையும் சமகால செல்நெறியும்

# TEMPLE CULTURE ACCORDING TO SIVAGAMIC TRADITION ORIGIN AND ITS PRESENT TREND

தொன்மைமிகு சைவசமயத்தின் முதல் நூல்களாகவும் பிரமாண நூல்களாகவும் அமைவன சிவாகமங்கள். சிவாகமங்கள் சிவனை முதன்மைக் கடவுளாகப் போற்றுவன. எனவே அவை தெய்விக மரபு சார்ந்தவை எனச் சிறப்பிக்கப்படுகின்றன. அவை கூறும் இலக்கணங்களுக்கமைய உருவாகிய திருக்கோயில்கள் காலந்தோறும் சைவப்பண்பாட்டை வளம்படுத்தி வந்துள்ளன. சிவாகம மரபு திருக்கோயிற் பண்பாட்டின் மூலாதாரமாகும். சைவத்தின் மேன்மையை உலகறியச் செய்த பெருமை திருக் கோயில்களுக்கேயுரியது. மக்கள் அன்று தொட்டு இன்று வரை ஆத்மீக நலன் பெறுவதற்கான வழிமுறைகளில் திருக்கோயில் வழிபாடே முதன்மையாக அமைந்தது. தொன்மையான காலம் முதல் பக்திபூர்வமாகவும், உணர்வுபூர்வமாகவும் மக்களால் பேணிப் பாதுகாத்து வரப்பட்ட திருக்கோயிற் பண்பாடு சமகால ஓட்டத் திலும் சிவாகம மரபுக்கியைவாகுப், பேணிப் பாதுகாக்கப்படுவதன் மூலமே எமது சமய வாழ்வு மேன்மை பெறும். திருக்கோயிற் பண்பாட்டின் பாதுகாப்பரணாகவே சிவாகம மரபு விளங்கி வந்துள்ளமை இற்றைக் காலம் வரை உணரப்பட்டு வருகின்றது. பக்திநெறி வளம் பெறவும் சிவாகம மரபு பெரிதும் உதவி வருகின்றது.

**சிவாகம மரபு சார்ந்த சைவசமயத்தின் தொன்மை.**

மனிதன் தன்னைப்பற்றியும் தன்னைச் சார்ந்துள்ள பொருள்களைப் பற்றியும் எப்பொழுது அறியவும் உணரவும் தொடங்கினானோ அன்றே அவனிடத்தில் சமய உணர்வு உதயமாயிற்று எனக் கொள்ளலாம். மனிதன் தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதும் தன்னைச் சூழவுள்ள அனைத்துப் பொருள் களையும் படைத்தும், காத்தும் அழித்தும், மறைத்தும், அருளியும்

வருகின்ற பரம்பொருளை இறைவன் எனவும் கடவுள் எனவும் கருதத் தொடங்கியதோடு இறைவனுக்கும் தனக்குமுரிய இயைபையும் அவ்விறையை அடைவதற்குரிய நெறியையும் அடைவதற்குத் தடையாயுள்ளவற்றையும் ஆராயத்தலைப்பட்ட உணர்வே சமய உணர்வாயிற்று. சைவசமயம் இத்தகைய சிறப்பம்சங்களுடன் கூடியது. சமய உணர்வுக்கும், சமய ஒழுக்கத்திற்கும், சமய அறிவுக்கும் சமய நூல்களின் இன்றியமையாமைப் பற்றி நாவலர் கூறும் கருத்து சிந்தனைக்குரியது.

"யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகின்றவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாத பொழுது பயன்பெறான். அந்தச் சமயத்திற்குரிய கடவுள் இவரென்பதும் அவருடைய இலக்கணங்களும் அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும் விலக்கப்பட்ட பாவங்களும் அந்தப் புண்ணிய பாவங்களின் பயன் களாகிய சுகதுக்கங்களும் அவரை வழிபடும் முறைமையும் அந்த வழிபாட்டினாலே பெறப்படும் பிரயோசனமும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாத பொழுது அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குரு முகமாக விதிப்படி பெறப்படும் சமய நூற்கல்வி கேள்விகள் இல்லாத போதும் அந்த அறிவு உதியாது. ஆகவே கல்வியும், அறிவும், ஒழுக்கமுமாகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தவருக்கும் ஒத்த துணிவு." [1]

நாவலர் 1860 ஆம் ஆண்டு வெளியிட்ட ஒரு விக்கியாபனத்தில் தெரிவித்துள்ள இக்கருத்து சைவசமயத்திற்கு ஏற்புடையதாக அமைவ தோடு இன்றைய பேருரைத் தலைப்புக்கு மிகவும் இயைபாகவுள்ளது. சைவசமயத்திற்கும் ஆத்மீக சாதனைக்கும் நிலைக்களனாகவுள்ள திருக்கோயிற் பண்பாட்டை நெறிப்படுத்துவதிலும் சிவாகமஞ் சார்ந்த நெறிகள் இன்றியமையாத மூலங்களாகக் காலங்காலமாக விளங்கி வரும் காரணத்தால் அவை பற்றிய முக்கியத்துவம் பற்றியும் சைவத்தின் தொன்மை பற்றியும் நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. கிடைக்கப் பெறும் வரலாற்று மூலங்களைக் கொண்டு பார்க்குமிடத்து திருக்கோயிற் பண்பாட்டிற்குச் சிவாகமங்கள் முதல் நூல்களாக

விளங்கியுள்ளமை புலனாகின்றது. சிவாகம மரபை உரியவாறு பேணுவதிலும் அவை கூறும் வழியில் திருக்கோயிற் பண்பாட்டு அம்சங்களை ஒருங்கிணைந்து நடைமுறைப்படுத்துவதிலும் சைவ சமயச் சார்புடையோரது சமய இலட்சியமாகவும் நம்பிக்கையாகவும் இருந்து வருவது இயல்பே. எமக்கு முன் வாழ்ந்த அருளாளர்களும் சமயச் சான்றோர்களும் எம் மத்தியில் வாழும் சமய அறிஞர்களும் சிவாகமஞ் சார்ந்த அறிவுப் பரம்பலுக்குத் தம்மாலான பங்களிப்பினை நல்கியுள்ளமை மறுக்க முடியாத உண்மையாகும். சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாடு பற்றிய அறிவுப் பரம்பல் சமகாலச் செல்நெறியின் உறுதியுடன் இடம்பெற வேண்டுமென்ற தேவையும் இருந்து வருகின்றது. சிவாகமங்கள் தொடர்பான அறிவுத்தேடல் மற்றும் அறிவுப் பரம்பல் சமகால ஓட்டத்தில் மேன் மேலும் விருத்தி செய்யப்பட வேண்டுமென்ற அவசியமும் இருந்து வருகின்றது. ஏனெனில் சிவாகமங்கள் கூறும் பண்பாடு சார்ந்த விடயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற உணர்வு இன்றைய காலவோட்டத்தில் மக்களிடையே மேலோங்கி வருகின்றமை குறிப்பிடற்பாலது.

**சிவாகமங்களின் மரபு வழிச்சிறப்பு.**

சிவாகமங்கள் சைவத்தின் கருவூலம் என்ற நிலையில் அவற்றை உணர்த்தியவன் சிவனே என்பது மரபு ஆகும். எனவே சிவாகமங்கள் 'முதல்வன் வாக்கு' எனப் போற்றப்படுகின்றன. 'ஆகமம்' என்ற பெயர் பல பொருள்களைத் தரும். அவற்றுள் 'மரபுவழிக் கோட்பாடு' 'தொன்று தொட்டு வரும் அறிவு' என்ற பொருள்கள் சிறப்புடையன.[2] மரபுவழியாக அவை கூறும் கோட்பாடுகள் நடைமுறையில் இருந்து வருவதற்கு உதவியது குருசிஷ்ய மரபிலான உபதேச முறையாகும். அதன் மூலம் இடையீடின்றி வழங்கப்பட்டு வரும் காரணத்தால் 'மரபு' என்ற பெயர் சிறப்பாகச் சிவாகமங்களுக்கே பொருந்துவதாகும்.

ஆகமத்தின் மரபின் சிறப்புப்பற்றி பேராசிரியர் டி. எம். பி மகாதேவன் வழங்கிய கருத்து இங்கு கவனித்தற்குரியது. ஒரு சமய நெறியின் விசேட அம்சம் அதன் வழிபாட்டு முறையே ஆகுமென்றும் மனிதன்

அவனது புலன்களைச் சரிவரப் பயன்படுத்திப் புலனுணர்வின் தன்மையினின்று இறைத் தன்மைக்கு உயரச் செய்வதே இறை வழி பாட்டின் நோக்கமென்றும் இதனைச் செய்யும் ஒரு நுட்பமான முறையே இந்தியாவில் ‘தந்திரம்’ என வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டு பக்தனை இவ்வழிபாட்டு நுட்பத்தினுள் வரும்படி தூண்டுகின்ற இந்நூல்களுக்கு ஆகமங்கள் என்ற பெயருண்டு எனக் குறிப்பிடுகின்றார்.[3] இவ்வகையில் தந்திரம் என்ற சொல்லும் ஆகமத்தைக் குறிப்பதாகும். இவ்வாறு சிவாகமங்கள் உயர்ந்த தத்துவ சிந்தனைகளை உள்ளடக்கியிருப்பதாலும் உயர்ந்த உட்பொருளைக் கொண்டு விளங்குவதாலும் தன்னையடைந்தோரைக் காப்பாற்றும் திறன் பெற்றிருப்பதாலும் இவற்றுக்குத் தந்திரம் என்ற பெயர் வழங்கப்படுவதாக காமிகாகமம் விளக்கம் தருகின்றது.[4] சிவாகமங்கள் சித்தாந்தம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. இவ் வகையில் ஆகமம், தந்திரம், மந்திரம், சித்தாந்தம் ஆகியவை சிவாகமங்களைச் சுட்டும் பெயர்களாக அமைந்து சிவாகம மரபுக்குச் சிறப்புச் சேர்த்துள்ளன.

காமிகாகமத்தின் தந்திர அவதாரப் படலத்தில் மகரிஷிகள் இறைவனிடம் விண்ணப்பிக்க இறைவன் ஆகமங்களை அருளியதாகக் குறிப்பு உள்ளது. சதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங்களினின்றும் இருபத்தெட்டு ஆகமங்களும் தோற்றம் பெற்றதாகக் காரணாகமம் கூறும்.[5] சைவசமயத்தில் சிவாகமங்களைப் பொறுத்தவரை இம்மரபு நீண்ட காலமாக நிலை பெற்றதொன்று பின் எழுந்த சாஸ்திர மற்றும் சமய நூல்களிலும் இம்மரபு போற்றப்பட்டு வந்துள்ளமை குறிப் பிடற்பாலது. நாம் முன்னர் குறிப்பிட்டவாறு ஆகமம் முதனூல் எனச் சுட்டப்படும் பிரமாணச் சிறப்பு இக் கொள்கையினையே நிலைக்களனாகக் கொண்டது. இதற்கு ஆதாரமாக திருமூலரது திருமந்திரக் கருத்து அமைகின்றது.

**முதலாகும் வேத முழுதாகமமாகப்**
**பதியான வீசன் பகர்ந்த திரண்டு**[6]

என்ற வரிகளால் இம்மரபினைப் போற்றுகின்றார். மணி வாசகர்,

**மன்னு மாமலை மகேந்திர மதனிற்**
**சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்** [7]

எனக் கீர்த்தித் திரு அகவலில் ஆகம மரபின் தெய்விகச் சிறப்பைப் போற்றுகின்றார்.

சிவாகமம் தொடர்பான இம்மரபு பற்றிய விடயம் நம்பிக்கை தெய்விகம் மற்றும் அனுபூதி ஆகியவை சார்ந்ததாகும். இத்தகைய சிந்தனைகளை நாம் கருத்திற் கொள்ளுமிடத்து சிவாகமங்கள் சைவத்தினதும் அச்சமயத்தின் நிலைக்களனாக அமையும் திருக் கோயில்களுக்கும் அவை கூறும் பண்பாட்டு விழுமியங்களுக்கும் மூலம் எனக் கொள்ளப்படும் மரபு தெளிவாகப் புலப்படுகின்றது. முதல் நூலுக்குரிய இலக்கணத்தைத் தொல்காப்பியரும் விளக்கியுள்ளார்.

**வினையினீங்கி விளங்கிய வறிவின்**
**முனைவன் கண்டது முதனூலாகும்**

என்ற கூற்று ஆகமங்களுக்கும் பொருந்துவதாக உள்ளது.

மெய்ப்பொருளை அறிய விழையும் முயற்சி நீண்டகாலமாகச் சைவசமய மரபில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. பதியாகிய இறை வனை உணர்த்தும் விடயத்தில் ஆகமம் உறுதுணை புரியுங்காரணம் பற்றிச் சைவசித்தாந்தம் இதனைச் சிறப்பித்துக் கூறும். ஆகமம் உரை யளவை எனவும் சுட்டப்படுகின்றது. கடவுள் இருப்பை உணர்த்தும் நூலாகிய ஆகமத்தைக் கொண்டறியும் அறிவே 'ஆகம அளவை' எனச் சுட்டப்படுகின்றது.[8] இறையுண்மைக்குச் சான்றே ஆகமப்பிரமாணம் என்ற கொள்கை சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாட்டிற்கும் நன்கு பொருந்தும். ஆகம அளவை பற்றிய கருத்து மணிமேகலை யிலும் குறிப்பிடப்படுகின்றது. 'ஆகம வளவை யறிவ னூலால்' என்ற தொடர் கவனிக்கத்தக்கது.[9] திருமூலரது திருமந்திரத்தில் இடம்பெறும் மற்றுமொரு பாடல் இக்கருத்தை மேலும் வளம்படுத்துவதாகவுள்ளது.

**ஆகும் அனாதி கலையா கம வேதம்**
**ஆகுமத் தந்திர மந்நூல் வழிநிற்றல்**
**ஆகு மனாதி யுடலல்லா மந்திரம்**
**ஆகுஞ் சிவ போத கம் உபதேசமே.**

இதன் வழி ஆகமத்தின் தொன்மை மிகு மரபு சுட்டப்படுகின்றது. மேலும் இறைவன் நூல் எனவும் நாதனுரை எனவும் திருமூலர் சுட்டுவது சிவாகம மரபிற்கு வளம் சேர்ப்பன. ஆகமங்கள் தெய்விக நிலையில் உணர்த்தப்பட்ட மரபினை

**'அண்ண லருளா லருளுஞ் சிவாகமம்'**

என்றவரி சுட்டி நிற்கின்றது. திருமூலர் திருமந்திரத்தில் ஆகமச்சிறப்பு என்ற பிரிவில் பல இடங்களில் இதே தொடரைப் பயன்படுத்துவது அம்மரபின் முக்கியத்துவத்தினை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.[10]

ஆகம மரபைப் பின்பற்றிய நூலாகவும் திருக்கோயில் பண்பாட்டினைச் சிறப்பிக்கும் நூலாகவும் திருமந்திரம் குறிப்பிடற்பாலது. திருமூலர் பயன்படுத்திய நூலின் தலைப்பு மந்திரம் என்ற பெயரிலும் அந்நூல் விரித்துரைக்கும் சிவாகமப் பொருள் தந்திரம் என்ற பெயரிலும் அமைவது குறிப்பிடற்பாலது. ஆகமங்களில் இடம் பெறுகின்ற மந்திர அவதாரப்படலம், தந்திர அவதாரப்படலம் ஆகிய இரு படலங்களின் பெயர்களையே தமது நூலில் பயன்படுத்தி சிவாகம மரபைச் சிறப்பித்துள்ளார். இவ்விரு பெயர்களும் முறையே நூலுக்குரிய பெயராகவும் கூறும் பொருளுக்குரிய இயலைக் குறிக்கும் பெயராகவும் திருமூலர் பயன்படுத்தியுள்ளமை தெளிவாகின்றது. சிவாகம மரபில் நின்றே திருமூலர் திருமந்திரத்தைப் பாடியுள்ளார் என்பதும் ஆகமப் பொருளைத் தமிழில் தருமளவிற்கு அவரது காலத்தில் ஆகம மரபு சிறப்புற்றிருந்துள்ளது என்பதும் இச்சான்றுகள் காட்டி நிற்கின்றன. அவரது காலத்தில் சிவாகம மரபு சார்ந்த கருத்துக்கள் திருக்கோயில் நடைமுறைக்கு உதவியிருக்கலாம் எனக்கொள்ள முடிகின்றது. திருக்கோயிலிழிவு என எதிர்மறைப் பலன்களைக் கூறும் வகையால் திருக்கோயில் பண்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றார்.

**முன்னவ னார் கோயில் பூசைகள் முட்டிடின்**
**மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்**
**கன்னங் களவு மிகுந்திடுங் காசினி**
**என்னரு நந்தி எடுத்துரைத்தானே.**

எனவும்

**பேர் கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தாற்**
**போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்**
**பார் கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம் என்றே**
**சீர் கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே**

எனவும் கூறும் வகையால் திருக்கோயில் வழிபாடு ஒழுங்காக விதிப்படி நடைபெற வேண்டுமென்பதை உணர்த்துகின்றார்.

ஆகம உபதேச முறைப்பற்றி காமிகாகமம், காரணாகமம் ஆகிய இரு ஆகமங்களிலும் முதற்படலமாக விளங்கும் தந்திர அவதாரப்படலத்தின் மூலம் நாம் அறியலாம். இருபத்தெட்டு ஆகமங்களின் தோற்றுவாய் கூறப்படுகின்றது. ஆன்மாக்களுக்கு நல்லனவற்றை உபதேசித்து பிறவிப் பெருங்கடலினின்று விடுவித்துக் காப்பாற்றுவதனால் சிவஞானமானது சிறப்புப் பெறுகின்றது. குறிப்பாக சிவஞானத்தின் இரு பிரிவுகளில் ஒன்றாகிய நாதவடிவஞானம், சாத்திரம் எனப்படலாயிற்று. இறைவனிடமிருந்து நாதரூபமாக வெளிவந்து பின்னர் சதாசிவப் பெருமானிடமிருந்து நாதரூபம், சாத்திரரூபமாக வெளிப்பட்டது என்பது மரபாகும். சிவபெருமானின் சக்தி எங்கும் பரவியுள்ள காரணத்தால் எங்கும் சிவமயம் என்ற நம்பிக்கை சைவசமயத்தில் சிறப்பாகவுள்ளது. அவர் மலமற்ற தன்மையுடையவராக இருப்பதால் தனது சக்தியால் ஞானசாத்திரங்களை அருளியுள்ளார் எனப் பௌஷ்கராகமம் கூறுகின்றது. சுத்தமாயை என்பதன் முதல் தத்துவமான விந்து என்பது சிவபெருமானது திருவருட் சக்தியால் அசைக்கப்படும் பொழுது நாதம் தோன்றுகின்றது. அந்த நாதமே ஓங்காரம் ஆகும். இது வேதங்களின் சாரமாகும். இதிலிருந்தே அனைத்து எழுத்துக்களும் சொற்களும் சொற்களால் சாத்திரங்களும் தோன்றும் என கிராணாகமம் II ஆம் படலத்தில் கூறுகின்றது. சதாசிவ வடிவம் என்பது ஞானவடிவான திருமேனியைக் குறிக்கும். அது மந்திரங்களால் உருவான தூய திருமேனியாக விளங்கும். மந்திரமயமான சதாசிவம் என்ற பெருஞ்சக்தியே நாதமயமான சாத்திரங்களின் தோற்றுவாயாகும்.[11] இத்தகைய மரபு தொடர்ந்தும் திருக்கோயில் பண்பாட்டில் புனிதமாகப் போற்றப்படுகின்றது. இறைவனுக்குரிய வழிபாட்டில் இடம்பெறும் மந்திரங்களுக்கு முன்பாக 'ஓம்' என்ற பிரணவம்

உச்சரிக்கப்படுவதும் ஆலய வழிபாட்டிலும் மற்றும் எத்தகைய வழிபாட்டிலும் முதன்மையாகப் பிரணவப் பொருளின் திருவடிவாகிய விநாயகர் வழிபடப்படுவதும் வழிபாட்டில் மந்திரங்கள் பிரயோகம் பெறுவதும் குறிப்பிடற்பாலது. திருக்கோயில் பண்பாட்டில் சிவாகம மரபு கால ஓட்டத்தில் தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வருவதை இத்தகைய அம்சங்கள் காட்டி நிற்கின்றன. மேலும் அப்படலத்தில் உபாகமங்கள் பற்றிய விளக்கம், ஆகம உபதேசமுறை அவற்றைக் கேட்டவர்கள் சுலோகங்களின் எண்ணிக்கை போன்ற விபரங்கள் உள்ளன. இறைவன் ஆகம வடிவில் நின்று அருள்புரிவான் என்பதை மணிவாசகர் சிவபுராணத்தில் 'ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க' எனப் போற்றியுள்ளார்.[12]

**தென்னாட்டில் சிவாகமம் சார்ந்த திருக்கோயில் பண்பாடு**

இத்தகைய சிறப்பு மிக்க தெய்விக மரபு சார்ந்த சிவாகமங்கள் கூறும் திருக்கோயில் பண்பாடு தென்னாட்டில் எத்தகைய நிலைகளில் பேணப்பட்டுள்ளது என்பது பற்றி அறிஞர்கள் பல்வேறு பரிமாணங்களில் நூல்கள் வாயிலாக விளக்கியுள்ளனர். தென்னிந்தியாவில் பல்லவர் காலத்தில் இரண்டாம் இராஜ சிம்மனின் காலம் (கி. பி. 700 - 728) ஆகம மரபு பேணப்பட்ட வகையில் குறிப்பிடத்தக்க காலமாகும். இம்மன்னன் சிறந்த சிவபக்தன், சைவசித்தாந்த வழியைப் பின்பற்றியவன், காஞ்சி கைலாசநாதர் கோயில் போன்ற கோவில்களை எழுப்பிய பெருமைமிக்கவன். இவன் ஆகமங்களைப் பிரமாணமாக ஏற்று ஆகம மரபு பேணியமைக்குரிய அகச்சான்றுகள் அவனது கல்வெட்டுக்களில் உண்டு. ஆகமத்தைப் பிரமாண மாகக் கொண்டவன் என்பதை 'ஆகமப் பிரமாண' என்ற பெயர் சுட்டுகின்றது.[13] ஆகமத்தைப் பின்பற்றுபவன் என்பதை 'ஆகமானுசாரி' என்ற குறிப்பு தெரிவிக்கின்றது. ஆகமம் கூறும் உயர் ஞானப் பொருளாகிய சைவ சித்தாந்தத்தையே தனது வழியாகக் கொண்டவன் என்பதை 'சைவசித்தாந்த மார்க'[14] என்ற குறிப்பு சுட்டுகின்றது.

இச்சான்றுகளிலிருந்து எமக்குப் புலப்படுவது யாதெனில் பல்லவர் காலச் சைவசமய மரபில் ஆகம மரபு சார்ந்த பண்பாட்டு நிலை காணப்பட்டிருக்கலாம் என்பதாகும்.

திருக்கோயில்களை மத்திய நாடியாகக் கொண்டு பக்தி நெறியை வளப்படுத்திய நாயன்மார்கள் தமது பதிகங்களில் ஆகமங்களை அருளிய இறைவனது பெருமையைப் போற்றியுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். இப்பாடக் குறிப்புகள் நாயன்மார் காலத்தில் ஆகமம் பற்றிய மரபுகள் பெருமளவில் சமய வாழ்வில் அறிமுகமாகியிருந்தன எனக்கொள்ள இடமுண்டு. சிவாகமங்கள் சிறப்பிக்கும் சிவாலயங்கள் இவர்களது சமய இயக்கத்திற்கு நிலைக்களனாக அமைந்தன. தமது பதிகங்கள் வழி சிவனது தெய்விகச் சிறப்பைப் பாடிய திருஞான சம்பந்தர் திருவிற்கோலத்தில் பாடிய தேவாரத்தில்,

**'தொகுத்தவனரு மறை அங்கம் ஆகமம் வகுத்தவன்'**[15]

என்றும்

திருவாலவாய் பதிகத்தில், [16]

**'ஆகமத்தோடு மந்திரங்களமைந்த சங்கதம்.'**

என்றும்

பாடிப்பரவியுள்ளார். திருநாவுக்கரசர்,

**'பனையிலாகமஞ் சொல்லும் தன் பாங்கிற்கே'** [17]

மூலம் ஆகமச் சிறப்பைப் பாடியுள்ளார். என்ற பாடல்

**'அண்டர் தமக்காகமநூல் பொழியும் ஆதியை'** [18] எனப் போற்றியுள்ளார். மேலும்

**'அம்மானே ஆகம சீலர்க்கருள் நல்கும் பெம்மானே'** [19]

எனவும்

**அரவொலியா கமங்களறி வாரறி தோத்திரங்கள்** [20]

எனவும்

போற்றியுள்ள வகையில் ஆகம மரபைப் பேணும் ஒழுக்க சீலர்களையும் சிறப்பித்துள்ளார். இத்தகைய தேவாரக் குறிப்புகள் ஆகம மரபு சார்ந்த விடயத்திற்கு முக்கிய சான்றுகளாகும்.

தென்னாட்டில் பல்லவ மன்னர்கள் சோழப் பேரரசர்கள் மற்றும் விஜயநகர நாயக்கர் மன்னர் எழுப்பிய திருக்கோயில்கள் பற்றிய சிறப்புக்களை அறிஞர்கள் விரிவாக நூல்கள் வழி எடுத்துக் கூறியுள்ளனர். இம்மன்னர்களினதும் கலைஞர்களினதும் அளப்பெரிய பணிகளின் பயனாய் தென்னாட்டில் ஆகம மரபு சார்ந்த வரலாற்றுப்

புகழ் மிக்க திருக்கோயில்கள் எழுச்சி பெற்றன. இவற்றின் வழி திருக்கோயிற் பண்பாடு மேன்மையடைந்தது.

**சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாட்டின் சிறப்பம்சங்கள்**

தெய்விக மரபு சார்ந்த சிவாகமங்கள் திருக்கோயிற் பண்பாடு வளம் பெற பல்வேறு நிலைகளில் உதவியுள்ளன. சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாடு இயற்கையோடு இயைந்து விளங்குவது சிறப்பம்சமாகும். இயற்கையிலிருந்து பெறப்பட்ட இயற்கைப் பொருட்களும் வழிபாட்டில் பெரிதும் பயன்பட்டன. இயற்கைச் சூழலில் அமைந்த திருக்கோயில்களால் பண்பாடு மேன்மையடைந்தது. இதன் சிறப்பினை மேலும் நாம் அறிந்து கொள்வதற்கு ஏதுவாகப் பண்பாடு பற்றி தெளிவுபடுத்துவதும் பொருத்தமாகும்.

டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே நாகரிகம் எழுச்சி பெறுவதைத் தெளிவுபடுத்துகின்றார். "நாகரிகம் என்பது ஒரு நாட்டின் மனிதத்தன்மையை அந்த நாட்டின் விழுமியக் கருத்துக்களை வழிவழியாகப் போற்றிக் காக்கப்படும் பண்பாடுகளை அடிப்டையாகக் கொண்டதாகும்"

எனக் குறிப்பிட்டுள்ளார். திருக்கோயில்களைப் பொறுத்தவரை வழிவழியாகப் போற்றிப் பாதுகாக்கப்படும் பண்பாடுகளுக்கு சிவாகமங்கள் மூலமாக அமைந்தன.

தென்னாசியாவிலே சிறந்து விளங்கும் திருக்கோயிற் பண்பாடு எமக்கு இதனை உணர்த்துகின்றது. கால ஓட்டத்தில் தென்கிழக்காசிய நாடுகளில் மாத்திரமன்றி மேற்குலக நாடுகளிலும் திருக்கோயில் பண்பாடு மேன்மையடைந்து வருகின்றது. இப்பண்பாடு இலக்கியம், வரலாறு, சமயம், கலை, அறிவியல், வாழ்வியல் முதலியவற்றால் விளக்கமுறுகின்றது. திருக்கோயிற் பண்பாட்டின் பயனாய் மனிதனது உள்ளம் அவன் வாழும் சூழல், சமூகம் ஆகியவை சீர்மை பெற்று வாழ்வு செம்மையடைந்துள்ளது. இத்தகைய பண்பாடு இற்றைக் காலம் வரை தொடர்வதால் இதன் மேன்மையால் மேலைநாட்டவர்களும்

பெரிதும் கவரப்பட்டுள்ளனர். உதாரணமாக பிரெஞ்சு நாட்டு அறிஞர் சிவாகமங்களின் ஏட்டுப்பிரதிகளைப் பரிசோதித்துப் பதிப்பித்தலிலும் அவற்றைப் பயன்படுத்தக் கூடியதாக பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தலிலும் தமிழ்நாட்டில் புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு ஸ்தாபனத்தின் மூலம் மேற்கொண்டு வரும் பணிகள் எடுத்துக் காட்டுகின்றன. அங்கு நெடு நாட்களுக்கு முன் நிறுவப்பட்ட பிரெஞ்சு ஸ்தாபனம் இந்தியப் பண்பாட்டுடன் தொடர்பு பூண்ட நூல்களை ஆராய்ந்து வெளியிடுவதில் பலகாலமாக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடற்பாலது. பிரெஞ்சு நாட்டினைச் சேர்ந்த அறிஞர்கள் இந்திய அறிஞர்களின் துணையோடு சிவாகமங்களைத் தேடிக் கண்டுபிடித்து சேகரித்து அவற்றைப் பரிசீலனை செய்து அச்சேற்றி வருவது குறிப்பிடற்பாலது. ரௌரவாகமம், மிருகேந்திராகமம் போன்றவை இவ் வகையில் குறிப்பிடத்தக்கது. சிவாகம மரபு சார்ந்த பண்பாட்டின் அறிவுப் பரம்பலுக்கு புதுச்சேரிக்கழகம் (Institut Francais D'indologie, Pandichery) பெரிதும் உதவி வருவது திருக்கோயிற் பண்பாட்டிற்குப் பெருமை தேடித்தந்துள்ளது.

திருக்கோயில் பண்பாடு தனிமனிதன் தொடங்கி குடும்பம், சமூகம், நாடு, உலகம் என விரிவடைந்து பயனளித்து வருவது குறிப்பிடற்பாலது. எனவேதான் திருக்கோயிற் பண்பாட்டின் உயர்வு சமூகத்திலும் நாட்டிலும் உலகத்திலும் பிரதிபலிப்பதை நாம் உணர முடிகின்றது. இவ்வகையில் சுதேச பண்பாடு பல்வேறு வகையில் திருக்கோயில்களின் வழி பரிணமித்துள்ளமையும் குறிப்பிடற்பாலது. சுதேச பண்பாடு பற்றி பேராசிரியர் என். சண்முகலிங்கன் தமது 'மரபுகளும் மாற்றங்களும்' என்ற நூலில் ஆராய்ந்துள்ளார். சுதேச பண்பாடு பற்றி வரையறை செய்வதற்கு ரெயிலர் (Taylor) என்பவர் தொன்மைப் பண்பாடு (Primitive Culture) என்ற நூலில் தந்துள்ள கருத்தை எடுத்துக் காட்டுகின்றார். அந்த வரைவிலக்கணம் இன்று வரை நிலைபெறுவது எனப் பேராசிரியர் சண்முகலிங்கன் குறிப்பிட்டுள்ளார். 'அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள் முதலானவையும் சமூக உறுப்பினராக ஒருவர் கற்கும் பிறதிறன்களும் பழக்கங்களும் அடங்கிய முழுமையான தொகுதியே பண்பாடு என வரையறை செய்கின்றார் ரெயிலர். ஒரு குறித்த பண்பாட்டுப் புலத்தின்

வரையறைக்குள் அல்லது தேச எல்லைகளுக்குள் இந்த அம்சங்களை இனங்காட்டும் போது அது சுதேச பண்பாடாக வரையறை பெறும் எனக் குறிப்பிடும் பேராசிரியர் சண்முகலிங்கன் மரபு வழி சமூக அமைப்புகளிடையே - சுதேச பண்பாடுகளின் தனித்துவமும் நிலைபேறும் தெளிவாகவே வெளிப்படும் எனக் குறிப்பிடும் கருத்து [21] சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாட்டினை விளக்கத் துணைபுரிகின்றது.

இவ்வாறு மக்களது பண்பாட்டினை செம்மையுறச் செய்யும் சிவாகமங்கள் கூறும் நான்கு பாதங்களாகிய சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் ஆகியவற்றுள் கிரியா பாதம் திருக்கோயில் பண்பாட்டோடு நெருங்கிய தொடர்புடையது. சரியா பாதம் சமயாசாரங்களை விளக்கும். கிரியா பாதம் கிரியைகள் பற்றியும் ஆன்மாக்கள் அருள் பெற்றுய்யும் இடங்களாகிய திருக்கோயிலோடு தொடர்புடைய கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் ஆகிய நான்கு பிரிவுகளையும் விளக்குகின்றது. இவ்வகையில் காமிகாகமம், காரணாகமம் ஆகியவை சிறப்புப் பெறுகின்றன. ஞான பாதம் சைவசித்தாந்த தத்துவ விருத்திக்கு மூலமாக அமைந்தது. கிரியாபாதத்திலுள்ள நால்வகை கிரியை மரபுகளும் கூறும் பண்பாட்டம்சங்கள் பற்றி நாம் கருத்திற் கொள்ளும் போது சமகால ஓட்டத்தில் திருக்கோயில்களில் இடம்பெறும் பல்வேறு விடயங்களுக்குத் தெளிவு பிறப்பிக்கக் கூடியதாகவுள்ளது. இற்றைக் காலத்தில் இவை தொடர்பாக விரிவாக ஆராய வேண்டிய தேவையும் உள்ளது.

**திருக்கோயில் அமைவிடச் சிறப்பு**

திருக்கோயில் அமைப்பின் சிறப்புப்பற்றி சிவாகமங்கள் கூறுவனவற்றை எஸ். பி. சபாரத்தினம் தமது 'சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம்' என்ற நூலில் தெளிவுபடுத்துகின்றார். இறைவனது திருக்கோயில்களையும் அவற்றின் சிறப்பையும் மேன்மையையும் போற்றும் சிவாகமங்கள் திருக்கோயில்கள் அமையத்தக்க இடங்களை விளக்கியுள்ளன. சிவாகமங்கள் கிராம நகர அமைவிடத்தை மையமாகக் கொண்டு திருக்கோயில்கள் அமைவதைக் கூறுகின்றன. நாகரிகம் முதிர்ந்துள்ள இக் காலத்தில் புதிதாக ஒரு நகரத்தையோ

கிராமத்தையோ குடியிருப்பையோ உருவாக்க வேண்டுமெனில் என்ன என்ன திட்டங்கள் மேற்கொள்ளப் பெறுகின்றனவோ அவை அனைத்தைப் பற்றியும் சிவாகமங்கள் கூறுகின்றன. மக்கள் அமைதியாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கேற்ற நல்ல சுற்றுச்சூழல் உள்ள இடத்தைத் தேர்ந்தெடுப்பது அந்த இடத்தைப் பல்வேறு பாகங்களாகப் பிரித்து 'இன்ன இன்ன இடத்தில் ஆலயம், இன்ன இன்ன இடத்தில் கல்விச்சாலை, இன்ன இன்ன இடத்தில் குடியிருப்பு, இன்ன இடத்தில் மருத்துவச்சாலை எனத்திட்டமிடுவது குடிநீர் வசதி உள்ளிட்ட ஏனைய நீர்நிலைகள் ஏற்படுத்துவது ஆகியன உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தையும் திட்டமிட்டு நகரத்தையோ கிராமத்தையோ எவ்வாறு அமைக்க வேண்டும் என்பது பற்றி காமிகாகமம் முதலிய ஆகமங்கள் விளக்கிக் கூறுகின்றன. இற்றைக் கால நூல்கள் இவை பற்றிக் கூறுவனவற்றுக்கும் சிவாகமங்களிற் கூறப்பட்டுள்ளனவற்றிற்கும் இடையே பல வேறுபாடுகள் காணப்படினும் ஆகமங்கள் கூறும் திருக்கோயில் அமைப்புப் பற்றிய செய்திகள் இற்றைக் கால ஓட்டத்தோடு ஒத்துவரக்கூடியவை என்பது சிறப்பம்சமாகும். மக்கள் வாழ்வதற்கேற்ற கிராமத்தையோ நகரத்தையோ உருவாக்க முதலில் நல்ல இடத்தை ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது போன்று சிவாகமங்கள் திருக்கோயில்கள் அமையத்தக்க நிலங்களின் பாகுபாட்டைக் கூறுவதைக் கவனிப்பின் திருக்கோயிற் பண்பாட்டில் அறிவியல் சார்ந்த விடயங்களுக்கு எத்தகைய முக்கியத்துவம் வழங்கப்பட்டு வந்துள்ளது என்பது தெளிவாகின்றது. உறுதியான கட்டடத்திற்கு ஏற்ப நிலத்தின் தராதரத் தன்மை பற்றிய பரீட்சையும் அறிவியல் சார்ந்ததாக அமைந்து திருக்கோயில் பண்பாட்டைச் சிறப்பித்துள்ளது. நிலத்தில் காணப்படும் பொருள்கள், வாழும் உயிரினங்கள் என்பவற்றிற்கேற்ப சிவாகமங்கள் 12 வகையான நிலங்கள் பற்றிக் கூறுகின்றன. உதாரணமாக சிவாலயத்திற்கு ஏற்றதாகக் குறிப்பிடப்படும் சைவபூமி என்ற நிலத்தைப்பற்றி நாம் ஆராய்ந்தால், கோங்கு, மருது, அரசு, அசோகு, ஆச்சா, நிலத்தாமரை, துளசி, அறுகு, விஷ்ணுகிராந்தி, எலிக்காதுக்கீரை, இலவு, மலைநன்னாரி, புறா, கிளி, அன்னம் இவைகளையுடைது எனவும் இது சிவாலயத்திற்கு மிகவும் மங்கலகரமானது எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு வகையான நிலமும் விரிவாக விளக்கப்படுகின்றது. நிலத்தேர்வின் பின்

இடம்பெற வேண்டிய சாஸ்திரபூர்வமான கிரியைகள் மக்கள் வாழ்வியலை வளப்படுத்தும் நோக்குடையவை.

**இயற்கைச் சூழலில் திருக்கோயில்கள்**

சமுதாயம் சீராகச் செயற்படவும் சமுதாய நோக்கங்கள் நிறைவேற வழியமைக்கும், சமயம் வளம் பெறுவதற்கும், அதன் அடிப்படையில் திருக்கோயில் பண்பாடு சிறப்பதற்கும் சைவசமய மரபில் இயற்கைச் சூழல் பெரிதும் அனுசரணையாக அமைந்தது. இச்சூழலில் மலர்ச்சியடையும் சமயம் சமுதாயத்தில் வாழுகின்ற மக்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்தி இறையருள் பெற வழிகாட்டுவதுடன் மட்டும் நின்றுவிடாது இவ்வுலக வாழ்வில் நல்ல வண்ணம் வாழ்ந்து சமுதாயத்திற்கும் பயனளிக்கும் வகையில் செயற்படவும் வழி காட்டுகின்றது. சிவாகம மரபில் அமைந்த திருக்கோயிற் பண்பாட்டில் இயற்கை அம்சங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களையும் மற்றும் சூரியன், சந்திரன், யஜமானன் ஆகிய சக்திகளையும் சிவனோடு தொடர்புபடுத்தி 'அட்டமூர்த்தி' என்ற சிறப்புப் பெயரில் போற்றப்படும் மரபு குறிப்பிடற்பாலது. இறைவன் இந்த எட்டு அம்சங்களிலும் விரவியுள்ளான் என்ற கோட்பாடு உன்னதமானது. சிவன் இயற்கைச் சக்திகளின் வடிவமாகவே விளங்கி உலகில் மக்கள் வாழ்விற்கு அருள்புரிகின்றார் என்ற நம்பிக்கை திருக்கோயிற் பண்பாட்டில் சிறப்படைவதற்குச் சான்றாக சிவனுக்குரிய பஞ்சபூதத் தலங்கள் தமிழகத்திற் சிறப்படைந்தன.

நிலம் :- காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்
நீர் :- திருவானைக்கா
நெருப்பு :- திருவண்ணாமலை
காற்று :- திருக்காளத்தி
ஆகாயம்:- சிதம்பரம்

ஆகியவற்றின் தெய்விக மரபு குறிப்பிடற்பாலது. இம்மரபு திருக் கோயில் பண்பாட்டினை மேம்படுத்தியுள்ளது. மணிவாசகர் இம்மரபை திருவாசகத்தில் போற்றித்திரு அகவலில் சிறப்பித்துள்ளார்.

**பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய்த் திகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி**

என்றவரிகள் குறிப்பிடற்பாலன. சிவாகம மரபில் சமய நிறுவன மாக எழுச்சி பெற்ற திருக்கோயில்கள் பண்பாட்டிற்கு அடித்தளமாக அமைந்து உறுதுணையாக விளங்குவதை அப்பர் பெருமான் தமது பதிகமொன்றில்,

**'திருக்கோயி லில்லாத திரு விலூரும்**
**திருவெண்ணீ றணியாத திருவி லூரும்**
**அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே'** [22]

எனக் குறிப்பிடுகின்றார்.

அப்பர் சுவாமிகள் இப்பாடலில் திருக்கோயிலின் மேன்மையைப் போற்றியதோடு திருவெண்ணீற்றின் பெருமையையும் போற்றியுள்ள பண்பாட்டு நலன் உய்ந்து உணரற்பாலது. சிவாலய வழிபாட்டில் திருநீற்றின் பெருமை போற்றப்பட்டமைக்கு அது சிவசின்னம் என்பதற்கு அப்பால் திருக்கோயில் உணர்த்தும் சைவப்பண்பாட்டின் அடையாளமாக மக்கள் அணிந்து தாம் சைவசமயத்தைச் சார்ந்த வர்கள் என்ற சமூக நல்லிணக்கத்துடன் வாழவும் திருக்கோயில்களில் இறைவனை வழிபட்ட அவனது திருவருளின் சின்னமாக அதனைப் பெற்று அணிந்து பயனடையவும் உதவியது. இதற்கமைவாகவே திருநீற்றின் பெருமையை நாயன்மார் சிறப்புறப் போற்றியுள்ளனர்.

**திருக்கோயிற் பண்பாட்டில் கோயில் நகரங்கள்**

திருக்கோயில் பண்பாட்டில் ஊர்கள் மேம்பாடு அடைந்தன. கோவில் நகரங்கள் எழுச்சிபெற்றுப் பண்பாட்டின் உறைவிடங்களாக மிளிர்ந்தன. இவ்வகையில் தென்னாட்டில் ஊர்களின் பெயர் 'திரு' என்ற சிறப்பை முதன்மையாகப் பெற்றுத் திகழ்ந்தன. எடுத்துக் காட்டாகத் திருவண்ணாமலை, திருச்செந்தூர், திருவையாறு, திருப்

பதி, திருவானைக்கா, திருக்கடவூர் போன்றவை ஒரு சிலவாகும். இலங்கையில் பாடல்பெற்ற தலங்களாகிய திருக்கேதீச்சரம், திருக் கோணேஸ்வரம் குறிப்பிடற்பாலன. மற்றும் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவில், கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பல வாணேசர் ஆலயம், நல்லூர் ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம், சட்டநாதர் கோவில், முன்னேச்சரம் ஸ்ரீ முன்னைநாத சுவாமி கோவில், கந்தனது கோயில்களின் வரிசையில் மாவிட்டபுரம், நல்லூர், மண்டூர், செல்வச் சந்நிதி, கதிர்காமம் போன்ற இடங்களில் உள்ள ஆலயங்களினால் அவ்வூர்கள் பெருமைபெற்றன. தெல்லிப்பழை துர்க்கையம்மன், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில், வல்லிபுரம் ஆழ்வார், ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோவில், வண்ணை வெங்கடேசப் பெருமான் கோவில் போன்றவையும் அவை அமைந்த ஊர்களுக்குச் சிறப்புச் சேர்த்தன. கீரிமலை நகுலேஸ்வரத்தில் அமைந்த சிவாலயம் தீர்த்தச் சிறப்புப் பெற்றது.

தென்னாட்டில் திருக்கோயில்களினால் பல ஊர்கள் உலகப்புகழ் பெற்றன. தென்னாட்டில் பல்லவர் காலத்தில் எழுச்சி பெற்ற ஆலயங்களுள் காஞ்சி ஸ்ரீ கைலாசநாதர் கோயில் சிறப்புமிக்கது. இதனால் நகரங்களுள் காஞ்சி மாநகரம் புகழ் பெற்றது. தென்னாட்டுத் திருக்கோயிற் பண்பாட்டு வரலாற்றில் இந்நகரம் கேந்திரமாக விளங்கியது. மதுரை மாநகரில் விளங்கும் ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம் கட்டடக்கலை , சிற்பம், ஓவியம் போன்ற கலைச்சிறப்புக் களுடன் திருக்கோயிற் பண்பாட்டிற்குப் பெருமை சேர்த்தது. சோழர் காலத்தில் எழுச்சி பெற்ற தஞ்சைப் பெரிய கோயில் கட்டடக்கலையின் மேன்மையினால் திருக்கோயில் பண்பாடு உலகப்புகழ் பெற்றது. சம கால ஓட்டத்தில் பொறியியலாளர்களது கவனத்தையும் கருத்தையும் கவரக்கூடிய வகையில் அதிசிறந்த நுட்பத்திறனுடன் உருவாகிய சிவாலயக் கட்டடக்கலையில் இன்றும் சிறந்து விளங்குகின்றது. பொறியியலாளர்களையும், கலாரசிகர்களையும் வியப்பில் ஆழ்த்தி வருகின்றது. இத்திருக்கோயில் திருச்செந்தூர் அங்கு எழுந்த முருகன் ஆலயத்தினால் சிறப்படைந்தது. இத்தகைய சிறந்த திருக்கோயில்கள் பக்திநெறி மேம்பாடு அடையப் பெரிதும் உதவியுள்ளன.

அப்பர் பெருமானின் அடைவுத் திருத்தாண்டகம்[23] பல்வேறு திருக்கோயில்களின் மகிமை பற்றியும் அவற்றை வழிபடுவதனால் கிட்டும் பேறு பற்றியும் குறிப்பிடுகின்றது - பள்ளி, ஊர், குடி, கோயில், காடு, ஈச்சரம், மலை என்பவற்றோடு கூடிய திருக்கோயில்களாகக் குறிப்பிட்டுள்ளார். திருக்காட்டுப்பள்ளி, திருக்கடவூர், செம்மங் குடி, பெரும்பற்றப்புலியூர், பெருங்கோயில், கரக்கோயில், ஞாழக்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில், திருக்கோயில், திருமறைக்காடு, இராமேச்சுவரம், கை லைமலை போன்றவை சிவனுறையும் கோயில்களாகக் குறிப்பிட்டு இக்கோயில் சூழ்ந்து தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே எனப் போற்றியுள்ளார். முருகப்பெருமானுக்குரிய ஆறுபடை வீடுகள் எனச் சிறப்புப் பெற்ற திருக்கோயில்களாக திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர்ச் சோலை போன்றவை குறிப்பிடற்பாலன. இவற்றின் வழி மூர்த்தி, தல, தீர்த்த மரபு மேலோங்க வழியேற்பட்டது.

இந்தியாவில் உன்னதமான இயற்கைச் சூழல், அமைதி, புனிதத் துவம் போன்ற சிறப்பம்சங்களுடன் கூடிய இமயமலைப் பிரதேசம் இறைவனது இருப்பிடமாகப் போற்றப்பட்டமை திருக்கோயிற் பண் பாட்டில் மற்றுமொரு சிறப்பம்சமாகும். இமாலயத்தில் ஊற்றெடுக்கும் கங்கையும் புனித நதியாகப் பண்பாட்டில் சிறப்படைந்தது. அதனை அண்டிய காசி நகரில் அமைந்துள்ள ஸ்ரீ விசாலாட்சி சமேத விசுவநா தர் கோயில் எழுச்சி பெற்று திருக்கோயில் பண்பாட்டிற்குச் சிறப்புச் சேர்த்தது. இது சைவமரபில் புண்ணிய பூமியாகப் போற்றப்பட்டு வருகின்றது. காசி யாத்திரை சைவர்களது சமயக்கடமையில் முக்கியத்துவம் பெற்றதோடு பெரும் எண்ணிக்கையிலான சைவப் பெருமக்கள் தினமும் இந்த யாத்திரையில் பங்குகொண்டு சமயக் கடமையை நிறைவேற்றி ஆத்ம நலன் பெறுகின்றனர். மேலும் யாத் திரை மேற்கொண்டவர்களிடையே உயர்ந்த சமூகப் புரிந்துணர்வு, நல்லிணக்கம் ஏற்பட்டு திருக்கோயில் பண்பாடு வளம் பெறலாயிற்று. கங்கைக் கரையில் காசி சிறப்படைந்தது போன்று தென்னகக் கடற்கரையில் இராமேச்சுவரம் என்ற சிவாலயம் சிறப்படைந்தது.

தலயாத்திரையைப் பொறுத்தமட்டில் மக்களது சமயஞ் சார்ந்த பண்பாடு வாழ்விலும் இவ்விரு தலங்களுக்கு இடையே ஏற்பட்ட நெருங்கிய தொடர்பினால் சைவ மரபு மேனிலை அடைந்தது. இத் தலயாத்திரை உன்னதமான பக்தி நெறி வளம் பெற வழியேற்படுத்தி சமய நம்பிக்கையையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியமை குறிப்பிடற்பாலது. பண்பாட்டு மரபில் குறிப்பிடப்படும் 'ஆஸேது ஹிமாசல' என்ற தொடர் தென்னாட்டில் தென் முனையில் உள்ள சேதுக்கரையிலிருந்து வடக்கே இமயம் வரை திருக்கோயில் பண்பாடு பரந்து விரிவடைந்த சிறப்பைச் சுட்டுவதாக அமைந்தது. பெரும்பாலான ஆற்றங்கரை, கடற்கரை, ஆறுகள் சங்கமமாகும் இடம், மலைகள், மலைஉச்சி, வனம், பூங்கா போன்ற இடங்கள் புனித தலங்கள் எழுச்சி பெற ஏற்ற சூழலாக அமைந்தன. இரு நதிகள் சங்கமமாகும் இடமும் நதிகள் கடலுடன் சங்கமமாகும் இடமும் புனிதத்துவம் வாய்ந்த இடங்களாகத் திருக்கோயிற் பண்பாட்டில் போற்றப்பட்டன. இத்தகைய இயற்கை நிகழ்வை ஞானிகள் மனித வாழ்வின் ஆத்மீக நிலையோடு தொடர்புபடுத்தினர். ஆன்மாக்களாகிய நதிகள் பரமான்மாவாகிய கடலோடு சங்கமமாவதாக உருவகித்தனர்.

திருக்கோயில் தொடர்பான அறிவும் பயிற்சியும் மேம்படுவதற்கு காடுகளின் நடுவே அமைதியான சூழலில் அமைந்த ஆச்சிரமங்களும் குருகுலங்களும் பெரிதும் உதவின. இவ்வாறாக சிறப்படைந்த திருக்கோயில்களின் வரிசையில் உன்னதமான திருத்தலமாகப் போற்றப்படும் சிதம்பரம் திருக்கோயில் பண்பாடு வளம் பெற பெரிதும் உதவியது- இது ஆகாயத் தலமெனப் போற்றப்படுவது தில்லை நடராஜர் கோயில் என்ற சிறப்புப் பெயரைக் கொண்டதும் இத்தலமே. நாற்புறமும் அழகிய நான்கு கோபுரங்களைக் கொண்ட சிவத்தலம் இதுவாகும். சைவ மரபில் ஹ்ருதய ஸ்தானமாகப் போற்றப்படுவது. இக்கோயிலின் கோபுர தரிசனம் திருக்கோயிற் பண்பாட்டின் சிறப்பம்சமாகும். இங்கு இறைவனுக்கு ஐந்து சபைகள் உள்ளன. சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம், நிருத்தசபை, ராஜசபை என்பனவாகும். இங்கு சிற்சபையில் வலது பக்கத்தில் உள்ள சிறு வாயிலின் திரையகற்றப்படும் போது சிதப்பர ரகசிய தரிசனம் இடம்பெறும். இங்குள்ள பத்துத் தீர்த்தங்களில் சிவகங்கை

முக்கியத்துவம் பெறுகின்றது. இத்தலத்தின் தலவிருட்சம் தில்லை மரமாகும். உமாபதி சிவாச்சாரியார் சிதம்பரத் திருத்தலத்திற்குப் பாடிய புராணம் கோயிற் புராணம் எனச் சிறப்படைந்தது. திருக் கோயிற் பண்பாட்டின் முக்கிய விடயங்கள் இதில் உள்ளன. மாணிக்க வாசக சுவாமிகள் இத்தலத்தின் மீது உயர்ந்த பக்தி பூண்டு திருவாசகத்தின் மூலம் இறைவனைப் போற்றித் துதித்துள்ளார். அப்பர் பெருமான் ஆனந்தக் கூத்தின் திருக்கோலத்தை அழகுறப் பாடியுள்ளார்.

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ்**
**வாயின் குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம் போல்**
**மேனியில் பால் வெண் ணீறும்**
**இனித்த முடைய எடுத்த பொற்**
**பாதமும் காணப் பெற்றால்**
**மனித்த பிறவியும் வேண்டுவதே**
**இம் மா நிலத்தே.**[24]

எனத் திருச்சிற்றம்பலப் பதிகத்தில் ஆனந்தத் தாண்டவத்தின் தெய்விகச் சிறப்பை அப்பர் போற்றியுள்ளார். சேக்கிழாரது தொண் டர்களது பெருமை கூறும் பெரிய புராணம் 'உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்' என்ற தொடக்கத்தைக் கொண்டுள்ளது. அது அரங்கேறியது ஆயிரங்கால் மண்டபத்திலாகும். திருமூலர் திருமந் திரத்தில் திருக்கூத்துத் தரிசனத்தை,

**எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி**
**எங்கும் சிதம்பரம் எங்கும் திருநடனம்**
**எங்கும் சிவமா யிருத்தல் எங்கெ ங்கும்**
**தங்கும் சிவனருள் தன் விளையாட்டதே.**

எனப் போற்றுகின்றார். 'எங்கும் சிதம்பரம் எங்கும் திருநடனம்' எனப் போற்றி சைவ சமயத்தைப் பெருமைப்படுத்தியுள்ளமை சிதம்பரத் திருக்கோயில் பண்பாடே காரணமாகும். இவ்வழகிய திருநடனத்தைக் கண்டு பயன்பெற,

**'முத்திதரும் தெய்வச் சபையைக் காண்பதற் குச்**
**சேர வாரும் செகத்தீரே'**

எனத் தாயுமானவர் உலகத்தோரை அழைப்பது திருக்கோயிற் பண்பாட்டின் மேன்மைக்குச் சான்றாகும். திருக்கோயில் வழிபாட்டில் பஞ்சபுராணம் ஓதுவற்கு முன்பும் நிறைவுபெறும் போதும் 'திருச்சிற்றம்பலம்' என உச்சரித்தல் இத்தலத்தின் பண்பாட்டுச் சிறப்புக்கு மற்றுமொரு சான்று - திருக்கோயில் பண்பாட்டில் சிதம்பரம் பெற்றுத் திகழும் தெய்விகப் பெருமையை சிவபூமி எனத் திருமூலரால் போற்றப்பட்ட இலங்கையிலும் சைவமக்களால் காலந்தோறும் உணரத்தக்க வகையில் யாழ்ப்பாணம் காரைநகரில் சிவாலயமொன்று ஈழத்துச் சிதம்பரம் எனப் பெயரிட்டுப் போற்றி வருகின்ற திருக்கோயிற் பண்பாட்டின் செல்வாக்கைக் காட்டிநிற்கின்றது. இத்தகைய திருக் கோயில்களில் வழிபாட்டிற்குரிய தெய்வங்களின் திருநாமங்களை மக்கள் தமது குழந்தைச் செல்வங்களுக்குரிய பெயராக வைத்து தெய்விக மரபைப் போற்றி வருவதும் இப்பண்பாட்டின் மற்றுமொரு சிறப்பம்சம். கைலாசநாதன், கனகசபை, சிற்றம்பலம், பேரம்பலம், தில்லை நடராஜன், நடராஜன், சிவலிங்கம், வைத்தியநாதன் போன்ற நாமங்களும், முருகனுக்குரிய நாமங்களாகிய சுவாமிநாதன், சரவணபவன், சிவகுமாரன், கார்த்திகேயன், குருசுவாமி, சிவஸ்வாமி, ஆறுமுகன், ஷண்முகன், திருச்செந்தூரன், கந்தசுவாமி போன்ற நாமங்கள் ஒரு சில.

எமது பண்பாட்டில் நடராஜரது மகத்துவம் சிறப்பாகப் போற்றப் பட்டது போன்று இவ்வடிவத்தின் கலைச்சிறப்பும் உலகளாவிய நிலையில் போற்றப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. நடராஜரின் கலையெழிற்கோலத்தையும் சிவாகமஞ் சார்ந்த கலைக் கோட் பாட்டின் பெருமையையும் உலகறியச் செய்த பெருமை கலா யோகி ஆனந்தக் குமாரசுவாமி அவர்களையே சாரும் - அவரது சிவானந்த நடனம் என்ற நூல் கலைகளின் சிறப்பினால் திருக்கோயிற் பண்பாடு உலகளாவிய பெருமை பெற்றதை எடுத்துக்கூறுகின்றது. நடராஜரது நடனத்தின் சமய தத்துவார்த்த விடயங்களை இந்நூல் விளக்கிக் கூறுகின்றது. அதுபோன்று சிவராமமூர்த்தி என்ற அறிஞர் கலை மரபிலும் சமய சிந்தனையிலும் இலக்கிய மரபிலும் நடராஜர்

என்ற நூல் மூலம் நடராஜ வடிவத்தின் பெருமையை உலகறியச் செய்துள்ளார். இவ்வடிவத்தை உலகுக்கு அறிமுகம் செய்த மற்று மொரு நூல் கமில் சுவலபில் என்ற அறிஞரது சதா நிருத்த ஆனந்த தாண்டவம் என்ற ஆங்கில நூலாகும் ஆடவல்லான் என்ற சிறப்புப் பெயருடன் சோழப் பெருமன்னர்கள் நடராஜரின் பெருமைகளைப் போற்றியுள்ளனர். பிரபஞ்ச இயக்கத்தின் தத்துவத்தை உணர்த்தும் நடராஜரின் கலைச்சிறப்பை மேல்நாட்டவர்களும் உணர்ந்து பாராட்டியுள்ளனர். சிவானந்த நடனம் என்ற கலாயோகியின் நூலுக்கு முன்னுரை வழங்கிய ரோமெய்ன் ரொயான்(ட்) "பாரதத்தின் கலைத்துறையிலுள்ள சிறந்த ஆக்கங்களிலே அழகுணர்ச்சியானது விஞ்ஞானத்தோடும் சமயத்தோடும் இணைந்திருத்தலைக் காண் கின்றோம்". எனக் குறிப்பிட்டுள்ளமை திருக்கோயில் கலைமரபின் சிறப்பிற்குச் சான்றாகும்.

**திருக்கோயில் பண்பாட்டில் நுண்கலைகளின் சிறப்பு**

இந்துக்களைப் பொறுத்தவரை கலையில் தெய்வீகத்தையும் தெய்வீகத்தில் கலையையும் இணைத்து வழிபட்ட மரபுடையவர்கள். இதனால் திருக்கோயிலில் வழிபடுவோரிடையே சமய உணர்வோடு கலையுணர்வும் சேர்ந்து வளம்பெற்றது. "கலையும் ஆர்வமிக்க ஆராதனையும் ஒன்றோடொன்று நெருங்கிய சம்பந்தமுடையவை பக்தியே கலை; கலையே பக்தி என்று கலாயோகியின் சிந்தனை குறிப்பிடற்பாலது. எனவே மக்களது வாழ்க்கை கலை உள்ளத்தை வெளிப்படுத்தும் வாழ்க்கையாக அமைந்தது. மனித வாழ்க்கையை ஆன்மீக நிலைக்கு உயர்த்தும் ஆற்றல் மிகு அரிய சாதனம் கலையே என்ற அடிப்படை உண்மையையும் திருக்கோயில் பண்பாடு உணர்த் தியது.

திருக்கோயில் பண்பாட்டினை உலகறியச் செய்த திருக்கோயில் கள் ஊர்தோறும் அமைக்கப்பட்டதன் நோக்கம் மக்களது வழிபாடு, சமய சாதனைகள் ஆகியன வளம் பெற வேண்டும் என்பதற்காகவே. ஆன்மாக்கள் மலம் நீக்கம் பெற்று இறைவனிடம் ஒடுக்கம் பெற வேண்டும் என்பது மற்றுமொரு இலட்சியமாகும். திருக்கோயிலே

இறைவன் எழுந்தருளியிருக்கும் புனிதத்தலம் என்பதால் அங்கு இறைவனைத் திருவுருவத்தில் வைத்து வழிபடுவது சிவாகம மரபாகும். திருவுருவ வழிபாட்டுக்கு சிவாகமங்களே வழியமைத்து திருக்கோயில் பண்பாடு வளம் பெற உதவின. நீண்ட காலம் இருந்து வரும் பல்வேறு சமய மரபுகளின் சங்கமமாக திருக்கோயில் பண்பாடு சிறப்புற்றது. திருக்கோயிற் கட்டடக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தமையை மட்டிடுவதற்கு எண்ணற்ற திருக்கோயில்களே சான்றாக உள்ளன. கர்ப்பகிருகம் விமானம் பல்வேறு நிலைகளைக் கொண்ட கோபுரங்கள் மண்டபங்கள் ஆகியன திருக்கோயில் பண்பாட்டிற்குப் பெருமை சேர்த்தன. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற பண்பாட்டு உணர்வு மக்களிடையே மலர்ச்சியடைந்தது. பேரரசர்கள் நிர்மாணித்த கோயில்களைப் போன்று சமகால ஓட்டத்தில் 'ஊர் கூடி கோயில் அமைத்தல்' என்ற உணர்வு ஆலயத்திருப்பணிகளில் பிரதிபலித்தது. எடுத்துக்காட்டாக திருவரங்கத்தில் 236 அடி உயரமுள்ள தெற்குக் கோபுர நிர்மாணப்பணியில் பெரிதும் ஈடுபட்டவர் ஸ்ரீ அஹோபில மடத்து 44 ஆவது ஸ்ரீமத் ஜீயர் சுவாமி ஸ்ரீ அழகிய சிங்கர் என்ற ஆன்மீகத் தலைவர் ஆவார். இத்திருப்பணிக்கு மாநில மத்திய அரசுகள் ஆதீனங்கள் கலைஞர்கள் ஆஸ்திகர்கள், திருச்சி வாழ் மக்கள் போன்ற அனைவரினது கூட்டு முயற்சியாக அமைந்தது. உள்ளக சமூக நல்லிணக்கத்தை இத்திருப்பணி பிரதிபலித்தது. இது திருக்கோயில் பண்பாட்டில் இறையடியார்களால் நிகழ்த்தப்பட்ட சாதனை எனப் போற்றப்படத்தக்கது.

இறைவனுக்குரிய திருவுருவங்களை அழகாகவும் நேர்த்தியாகவும் அளவுப்பிரமாணங்களுக்கேற்பவும் தெய்விகப் பொலிவுடன் அமைக்கும் விக்கிரகக்கலை திருக்கோயில் பண்பாட்டில் முக்கியத்துவம் பெற்றது. திருக்கோயில் பண்பாட்டு மரபில் கலைத்திறன் கொண்ட சிற்பக் கலைஞர் பாரம்பரியம் உருவாகவும் சிறந்ததொரு வழியேற்படலாயிற்று. அத்துடன் மக்களிடையே பக்தி உணர்வுடன் கலாரசனைப் பயிற்சியும் பண்பாட்டில் சிறப்புற்றது. சிற்பக்கலை மரபைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த உன்னதமான சிற்பசாஸ்திர மரபு உருவாகி சிற்பசாஸ்திரங்கள் திருக்கோயில் பண்பாட்டை வளம் படுத்தின.

திருக்கோயில் பண்பாட்டில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் திருக் கோயிலை உயிருட்டமிக்க புருஷனாக கருதப்பட்டமையாகும். திரு மூலர் தமது திருமந்திரத்தில்

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.**[25]

எனப் போற்றியுள்ளார். கோயிலும் மூர்த்தமும் உடலும் உயிரும் எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். புருஷனது கிடந்த கோலத்தில் திருக்கோயிலின் அங்கங்கள் பின்வருமாறு உவமிக் கப்படுகின்றன.

| | |
|---|---|
| கர்ப்பகிருகம் | - தலை |
| அந்தராளம் | - கழுத்து |
| முகமண்டபம் | - தோள் |
| மகாமண்டபம் | - வயிறு |
| பிரகாரம் | - கால் |
| கோபுரம் | - பாதம் |
| கோபுஸ்தூபி | - பாதத்தின் விரல்கள் |

இவ்வகையில் திருக்கோயில்கள் தத்துவார்த்த சிறப்புடன் மிளிர்ந்து பண்பாடு பெருமை பெற உதவியுள்ளன. வழிபடுவோன் உள்ளங்களில் இறை நம்பிக்கையையும் பக்தியையும் சமய விழுமியங்களையும் மேன்மையுறச் செய்தன. இக்காரணத்திற்காகவே பண்பாட்டில் திருக்கோயிலை புருஷனாக உவமித்து உன்னத இடம் வழங்கப்பட்டுள்ளது - தென்னாட்டில் திருக்கோயிலின் முக்கிய அங்கமாக திருவுருவங்கள் அமைந்த காரணத்தால் திருக்கோயிற் கட்டடக்கலையும் விக்கிரகக்கலையும் சிற்பக்கலையும் இணைந்து பண்பாட்டு பாரம்பரியம் சிறப்படைய உதவின. பல்லவர், சோழர், விஜய நகர நாயக்கர் கால கலை வளர்ச்சியின் சிறப்புக்களை அறிஞர் நூல்களின் வழி சிறப்பாக விளக்கியுள்ளனர். விரிவஞ்சி அவற்றைத்

தவிர்த்துள்ளோம். எடுத்துக்காட்டாக சோழர் காலத்தில் சிற்பக் கலைத்திறன் சிறப்படைந்ததை பேராசிரியர் சி. பத்மநாதன் பின் வருமாறு சிறப்பித்துக் கூறியுள்ளார்.

"சோழர் காலச் சிற்பங்கள் பல திறத்தவை பெருமளவிலா- னவை கல்லிலும் உலோகத்திலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன இக்காலச் சிற்பங்கள் அவற்றின் உன்னதக் கோலத்தினால் உலக- ளாவிய ரீதியில் நுண்கலை ரசிகர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. அக்காலத்தில் வார்ப்புக்கலையில் ஏற்பட்ட முன்னேற்றம் அதிசய- மானது. விஞ்ஞான பூர்வமான தொழில் நுட்பம் வேகமாக முன்னேறியுள்ள இந்நாட்களிலும் சோழர் காலக் கலைஞர்களைப் போன்று உயிரூட்டமான சிற்பங்களைக் கல்லிலும் உலோகத்திலும் அமைத்துக் கொள்ள முடியவில்லை".[26]

என்ற கருத்து திருக்கோயில் பண்பாட்டின் மேன்மைக்குச் சிறந்த சான்றாகும். இசை, நடனம், ஓவியம் ஆகிய கலைகளும் திருக்கோயில் பண்பாட்டில் பெற்ற வளர்ச்சி பற்றி அறிஞர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர். ஆலயங்களின் ஆதரவுடன் நடனக்கலை இசைக்கலை பெருவளர்ச்சியடைந்தன. திருமுறைகளும் பெருமை பெற்றன. பண்ணிசை வளர்ச்சி கண்டது. தஞ்சை பெருவுடையார் கோயில், சிதம்பரம், கும்பகோணம் சாரங்கபாணி கோயில் என்பவற்றில் உள்ள நாட்டிய கரணச் சிற்பங்கள் சோழர் காலத்தைச் சேர்ந்தவை. பெருவுடையார் கோவில் ஓவியங்கள் சோழர்கால ஓவியக்கலைச் சிறப்பிற்கு உன்னதமான உதாரணங்கள் என பேராசிரியர் சி. பத்மநாதன் குறிப்பிட்டுள்ளார்.

**சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாட்டில் கிரியை மரபு**

சிவாகமஞ் சார்ந்த திருக்கோயில் பண்பாட்டு வளர்ச்சிக்கு அரிய பங்களிப்பு நல்கியவர்கள் திருக்கோயில் சிவாச்சாரியர்கள் ஆவர். அவர்களது அரிய பணிகளால் கிரியை மரபும் ஆத்மீக வாழ்வும் சிறப்படைந்தன. இக்கிரியை மரபைப் பேணிப் பாதுகாத்து நடைமுறைப் படுத்துவதற்கென நீண்ட காலமாக ஒரு குருபாரம்பரியம் மேன்மையடைந்து வந்துள்ளது. குருவை இறைவனாகப் போற்றும் பண்பாடு சிறப்படைந்தது. திருமூலர் திருமந்திரத்தில்,

**குருவே சிவமெனக் கூறினன் நந்தி**
**குருவே சிவமென் பது குறித்தோரார்**
**குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்**
**குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.**[27]

என சிவகுரு தரிசனம் என்ற பகுதியில் போற்றுகின்றார். இது குருவின் மேன்மைக்குச் சான்றாகும். சிவாலயத்தில் சனகாதி முனிவர்களுக்கு தக்ஷிணாமூர்த்தி குருவாக எழுந்தருளி உபதேசம் செய்த மரபு குருவின் மேன்மைக்குச் சான்று. சிவாலயத்தில் கருவறை யோடு இணைந்ததாக தென்முகக் கடவுளாக இம்மூர்த்தி விளங்குவது குறிப்பிடற்பாலது. சிவாகமங்கள் குருவின் மேன்மையை 'ஆச்சாரிய லட்சணம்' என்ற பகுதியில் சிறப்பிக்கின்றது. குருகுல மரபில் ஏற்பட்ட குருகுலப்பயிற்சி சிறந்த குருமாரை உருவாக்க வழியேற்பட்டது. மாணவர்கள் சிவாகமஞ் சார்ந்த கிரியை மரபைக் கற்கவும் பயிற்சி பெறவும் வகையேற்பட்டது. மாணவர்கள் ஒழுக்கத்துடன் திகழவும் ஆத்மீகக் கல்வியைத் தெளிவாகப் பெறவும் இப்பயிற்சி உதவி யது. இதன் பெறுபேறாக திருக்கோயில் மரபில் உன்னதமான சிவாச்சாரிய பாரம்பரியம் உருவாக வழியேற்பட்டது. இன்றைய காலவோட்டத்தில் குருமார் பயிற்சி மேலும் சீர்மை பெற வேண்டிய தேவையுள்ளது. அக்காலத்தில் சிவாகமக் கல்வி வளம் பெறக் குருகுலக் கல்விக் கூடங்கள் உதவியது போன்று இன்றைய நிலையில் மேலும் சிறப்பாக இத்தகைய குருகுலங்கள் பணியாற்ற வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகும். இக்குருகுலங்கள் சிறப்புற செயற்படின் திருக்கோயில் பண்பாட்டு மரபில் சிறந்த சிவாச்சாரியர்கள் உருவாக வாய்ப்பேற்படும் - திருக்கோயில் பண்பாட்டிற்கு மூலாதாரமான சிவாகமங்களையும் அவை கூறும் கிரியை மரபினை வழிப்படுத்தும் பத்ததிகளையும் பேணிப்பாதுகாத்து வருவது சிவாச்சாரியர்களது பொறுப்பாகும்.[28] சிவாச்சாரிய மரபை பேணிப்பாதுகாப்பது இளந்தலைமுறை சார்ந்த சிவாச்சாரியர்களது கடமையாகும். திருக்கோயிற் பண்பாட்டு மரபு மேன்மை பெற அவர்களது பங்களிப்பு பெரிதும் உதவக் கூடியது.

திருக்கோயிற் கிரியை மரபைப் பேணும் நோக்கமாகக் கொண்டு ஒரு பத்ததி ஆசிரியர் பரம்பரை அக்காலத்தில் சிறப்படைந்தது. சிவாகமங்கள் விதித்துக் கூறும் விதிகள் முழுவதையும் பிரமாணமாகக் கொண்டு கிரியைகளைச் செய்யும் முறையினை ஒழுங்குபடுத்தி முறையாகக் கூறும் நூல்களாகிய பத்ததிகளை இயற்றிய பதினெண் பத்ததித் தலைவர்கள் சிறந்து விளங்கினர். பதினெண் சிவாச்சாரியர்களது பெயர்களைக் கொண்டு இந் நூல்கள் உருவாகியுள்ளன.[29] அவர்களுள் அகோர சிவாச்சாரியர், திரிலோசன சிவாச்சாரியர், சோமசம்பு போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். சிவாகமங்கள் கூறும் சிவலிங்க வழிபாடு சைவசமயத்தில் மேன்மையடைந்து திருக்கோயிற் பண்பாடு சிறப்புற்றது. சிவ சின்னங்களின் பெருமை திருக்கோயிற் பண்பாட்டில் சிறப்புற்றன. திருநீறு, உருத்திராக்கம், சிவனது பஞ்சாட்சரம் ஆகியவை சைவ சமயத்தை மேன்மையுறச் செய்தன.

இலங்கையிலும் சிவாகம மரபிற்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் சிவாச்சாரியர்கள் அளப்பரிய பணியாற்றியுள்ளனர். அச்சுவேலி சு. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களது பங்கும் பணியும் இவ்வகையில் குறிப்பிடற்பாலது. சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாடு வளம்பெற அவரது நூல்கள் பெரிதும் சிவாச்சாரியர்களுக்கு உதவின. - மகோற்ச சந்திரிகை (1932), ஆலய அமைப்பு ஆலய சேவை (1949), வேதாகம நிரூபணம் I, II (1950);(1951), மகோற்சவ விளக்கம் (1958), சிவாகம சேகர பிரதிட்டா விதி (1949), சிவலிங்க பிரதிட்டா விதி; சுப்பிரமணிய பிரதிட்டா விதி, சுப்பிரமணிய ஆலய நித்திய பூசாவிதி (1964), பைரவ பிரதிட்டா விதி (1968) என்பன சில. இவரது சைவசாஸ்திர பரிபாலனம் என்ற சஞ்சிகையும் குறிப்பிடற்பாலது. சிவஸ்ரீ குருக்கள் அவர்களது நூல்கள் தமிழகத்தில் உள்ள சிவாச்சாரியர்களது வரவேற்பையும் மதிப்பையும் பெற்றன.[30] சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களது ஆகமாமிருத வர்ஷிணி என்ற நூல் குறிப்பிடற்பாலது.[31] திருக்கோயில்களில் நடைபெறும் அபிஷேகங்களின் ஒழுங்கு முறைகள் பயன்படுத்த வேண்டிய பொருட்கள், மூலிகைகள், தானிய வகைகள் காமிக காரண ஆகமங்களின் விதிமுறைகளின் படி பல்வேறு ஸ்நபன அபிஷேக முறைகள் , குண்டங்களின் அமைப்பு, யாகசாலை அமைப்பு ஆகியன

சிறப்பாக விளக்கப்பட்டுள்ளமை திருக்கோயிற் பண்பாட்டின் வளர்ச்சிக்கு உதவியுள்ளன. திருக்கோயில் வழிபாட்டு முறைகளை வழிப்படுத்தும் நூல்களாக இவை விளங்குகின்றன.

இன்றைய நினைவுப் பேருரைக்குரிய பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களது சைவத் திருக்கோயிற் கிரியை நெறி என்ற நூல் தமிழில் வெளிவந்து சிவாகம மரபு சார்ந்த பண்பாட்டின் மேன்மையைப் பலரும் அறிந்து கொள்ள உதவியுள்ளது. சிவாச்சாரியர்களுக்கு மாத்திரமன்றி ஆலய அறங்காவலர்கள், வழிபடுவோர் மற்றும் இத்துறை சார்ந்த மாணவர்கள் ஆய்வாளர்கள் போன்ற அனைவருக்கும் பயன்படும் உன்னத படைப்பாகும்.

வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில் நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி பல சிறந்த பத்ததி நூல்கள் சமகால ஓட்டத்தில் வெளிவருகின்றன. இவ்வகையில் கலாபூஷணம் ப. சிவானந்த சர்மா வெளியிட்டு வரும் பல்வேறு பத்ததி நூல்கள் குருமார்களுக்குப் பெரிதும் உதவி வருகின்றன. பல்வேறு வைபவங்களின் போது இத்தகைய நூல்கள் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருவது எமது தொன்மைமிகு கிரியை மரபினைப் பேணி வருவதற்கு வாய்ப்பாக அமைகின்றது. முன்னர் சிவாச்சாரியர்கள் பெருமளவில் கையெழுத்துப் பிரதிகளாகவே தத்தமது பயன்பாட்டுக்கென வைத்திருந்த பல எண்ணிக்கையிலான பத்ததிகளும் கிரியை நூல்களும் இன்றைய கால ஓட்டத்தில் அனைவருக்கும் பயன்படக்கூடியதாக கலாபூஷணம் சர்மாவின் இவ்வரிய பணி உதவி வருகின்றமை குறிப்பிடற்பாலது. கிரியைகள் சார்ந்த அறிவுப் பரம்பலுக்கு மேற்குறித்த நூல்கள் நன்கு பயன்பட்டு வருகின்றன. பிரம்மஸ்ரீ க. வை ஆத்ம நாத சர்மாவின் அரிய முயற்சியாகிய 'விநாயக மகோற்சவ விளக்கம்' (1963) என்ற பத்ததியின் தமிழாக்க நூல் அனைவருக்கும் நன்கு பயன்படக்கூடியதாக அமைந்தது. பிரம்மஸ்ரீ சர்மாவின் இவ்வரிய முயற்சியை பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் பெரிதும் பாராட்டியுள்ளார். புதிதாகப் பயின்று கிரியைகளைச் செய்யத் தொடங்குபவர்களுக்கு இந்நூல் பெரும் வழிகாட்டியாகயமையும் எனவும் திருக்கோவிலில் தரிசிக்கும் சைவப்பெருமக்களும் இந்நூலை வாசிப்பின் மகோற்சவ கிரியை பற்றி விரிவாக அறிவர்.[32] எனவும் குறிப்பிட்டுள்ளமை திருக்கோயில்

கிரியை மரபு பற்றிய அறிவு விருத்தியடைய இந்நூல் உதவியுள்ளமை புலப்படுகின்றது.

சிவாகம மரபில் இடம் பெறும் கிரியைகளின் பயன்கள் உன்னத மானவை "கிரியையென மருவுமை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என உமாபதி சிவாச்சாரியார் சிவப்பிரகாசம் என்ற சித்தாந்த நூலில் கூறியுள்ள கருத்து திருக்கோயிற் பண்பாட்டின் பெருமைக்குச் சான்றாகும். திருக்கோயிலில் சிவாச்சாரியர் கிரியைகளின் நிறைவின் போது கூறும் ஆசீர்வாதம் குறிப்பிடற்பாலது. "அனைத்து மக்களும் நலமுடன் திகழ்வார்களாக" (சர்வே ஜனா : சுகினோ பவந்து) எனவும் 'அனைத்து உலகமும் நலம் பெறுவதாகுக' (சமஸ்த லோகா : சுகினோ பவந்து) எனவும் குறிப்பிடும் ஆசிகள் குறிப்பிடற்பாலன. "அனைத்து மங்கலங்களும் ஏற்படுவதாகுக" (சமஸ்த மங்களானி பவந்து) எனக் கூறும் மங்கலகரமான ஆசியும் சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாட்டின் உன்னத இலட்சியங்களுக்குச் சான்றாகவுள்ளன. சிவாகமம் சிறப்பிக்கும் அனைத்துக் கிரியைகளினா லும் அனைவரும் ஆத்ம சாதனைக்கு உரியவராகின்றனர். நாவலர் கூற்றுப்படி சமய உணர்வு மேலோங்குகின்றது. திருவலகிடுதல் முதல் சிவார்ச்சனை வரையுள்ள கிரியைகள் ஒருவனைப் படிப்படியாகப் பண்பாட்டு வாழ்க்கைக்கு ஏற்றவாறு பக்குவப்படுத்துகின்றன. மனிதரின் தேக இயல்பு, மன இயல்பு, விவேக இயல்பு, உயிர் இயல்பு என்ற நால்வகை இயல்புகளும் உடன்படக் கூடியதாக ஆத்ம சாதனை அமைவது குறிப்பிடற்பாலது. எனவேதான் திருக்கோயிற் பண்பாட்டில் சமய சாதனை சிறப்புற வழியேற்படுவதை சமய நூல்கள் சுட்டிக்காட்டுகின்றன. இப்பண்பாட்டில் தர்மத்தையும் விழுமியங்களையும் சிவாகமங்கள் காலந்தோறும் உணர்த்தி வருகின்றன. திருக்கோயிலில் பின்பற்றத்தக்க ஆசார ஒழுக்கங்கள் மேன்மை பெற இம்மரபு சார்ந்த வழிபாடு உதவி வருகின்றது. நாவலர் திருக்கோயில் ஒழுங்குகள் பற்றி எழுதிய நூல்களுக்கு இத்தகைய சிவாகம மரபே மூலமாக அமைந்தது.

சிவலிங்கத்தை அகமும் புறமும் வழிபடுவதனை முதன்மையாகக் கொண்ட திருக்கோயிற் பண்பாட்டின் பெருமையை அப்பர் பெருமான்,

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகாற் பேசாராகில்
ஒரு காலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டுண்ணாராகில்
அருநோய்கள் கெட வெண்ணீறணியாராகில்
அளியற்றார் பிறந்த வா றேதோ என்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.[33]

என இப்பாடல் வழி போற்றி மக்களை உறுதிபட ஆற்றுப் படுத்துகின்றார்.

**சமகாலவோட்டத்தில் சிவாகமஞ் சார்ந்த திருக்கோயிற் பண் பாடு.**

நாவலர் எமது நாட்டில் சைவசமய மறுமலர்ச்சியை ஏற்படுத் தியதோடு தமிழகத்தில் சென்னையில் திருத்தொண்டை நாட்டுப் பதிபுண்ணிய பரிபாலன சபையின் தலைவராகவிருந்து சிவ புண்ணியத்தின் பெருமையை யாவர்க்கும் புலப்படும் பொருட்டு பிரமாணங்கள் மூலம் சொற்பொழிவாற்றியமை திருக்கோயிற் பண்பாடு மலர்ச்சி பெற வழியேற்படலாயிற்று.

“சைவசமயிகளாகிய நாமெல்லாம் சிவஸ்தலங்களை விதிப்படி சிரத்தையோடு, வழிபடுதலும் அவைகளுள்ளே சிலமாயின வைகளை ஜீர்ணோத்தாரணஞ் செய்தலும் நித்திய பூசை முதலியவை நடத்து வித்தலுமே உத்தமோத்தம சிவபுண்ணியங்கள்” என பிரமாணங்கள் மூலம் எடுத்துக் கூறி திருக்கோயில் பண்பாடு வளம்பெற மக்களை ஆற்றுப்படுத்தியவர் நாவலர்.

“திருக்கோயில் முதலியவை அழிந்தால் அவைகளை முன்போலச் செய்தவர் பெறும் பயன் அவைகளை முன் செய்தவர்கள் பெற்ற பயனிலும் ஆயிரமடங்கதிகமாகும். திருக்கோயில் முதலியவைகளிலே ஒருறுப்புக் கிலமாயினும் அதனை முன்போலச் செய்தவர் பெறும் பயன் முன் செய்தவர் பெற்ற பயனிலும்நூறு மடங்கதிகமாகும்”.

என சிவபுண்ணியத் தெளிவு என்ற பிரமாணங்காட்டி விளக்கியவர் நாவலர் சிவாலயப் பண்பாடு மேன்மையடைவதற்கு

எம்மிடையே ஒற்றுமையுணர்வு மேலோங்குதலின் அவசியம் பற்றியும் நாவலர் தமது பிரசங்கத்தில் எடுத்துரைத்தார்.

"நிலமாயுள்ள ஸ்தலங்களை ஜீர் ணோத்தாரணஞ் செய்வதற்கும் நித்திய பூசை முதலியவை இல்லாத ஸ்தலங்களிலே நித்திய பூசை முதலியவை நடத்துவதற்கும் பெரும் பொருள் வேண்டுமாதலாலும் தனித்தாயினும் சிலர் மாத்திரம் கூடியாயினும் இவைகளை முடித்தல் இயலாமையாலும் சைவசமயிகளாகிய நம்மவர்களெல்லாம் ஒற்றுமை யுடையவர்களாய் ஒருங்க கூடல் வேண்டும். அப்படிக் கூடாத வழி இக்கருத்து சித்தி பெறாது தமிழர்களாகிய நம்மவர்கள் யாதாயினும் ஒரு கருமத்தை நடத்துவதற்கு ஒருங்கு கூடுதல் அரிது. ஒரோ வழி-கூடினும் ஐக்கியத்தோடு நிலைபெற்று எடுத்த கருமத்தை நிறைவேற்றல் மிக அரிது. அவர்கள் ஐக்கியமேயின்றிப் பெரும்பான்மையுந் தங்கள் உள்ளத்தில் விளையும் பகையையே பாராட்டிக் கலகம் விளைத்து எடுத்த தருமத்தைக் கைநெகிழ விடுதலே வழக்கம்...... சைவ சமயிகளாகிய நாமெல்லாம் நமது பரமபிதாவாகிய சிவபெருமா-னுடைய திருக்கோயில் முதலியவற்றிற்கு இடையூறு நிகழும் பொ-ழுது நம்முன்னே எத்துணைப்பகை இருப்பினும் அதனைச் சிறிதும் பாராட்டாது ஒற்றுமையுடையவர்களாய்த் திரண்டு அவ்விடையூற்றை நீக்கி அச்சிவபிரானுக்கு இனியர்களாய் ஒழுகுவதன்றோ அழகு. இப்படிச் செய்பவர்களன்றோ சைவசமயிகளென்றும் பெயருக்கும் அதனாற் பெறற்பாலதாகிய பெரும் பயனுக்கும்பாத்திரராவார்கள்.[34]

எனக் குறிப்பிட்டுத் திருக்கோயிற் பண்பாட்டைப் பாது காப்பதற் கேற்ற ஒற்றுமையுணர்வை மக்களிடையே ஏற்படுத்தியவர் நாவலர். திருக்கோயில் பண்பாட்டு நிலை பெறுவதற்கு சிவபுண்ணியச் செயல்களாகிய திருப்பணிகள் நிறைவேற்றப்படுவது இன்றி யமையாதது என்பது நாவலர் வாக்கிலிருந்து தெளிவாகின்றது. இதனை மக்கள் மத்தியில் வெற்றி பெறச் செய்வதற்கேதுவாக அமைந்ததே அவரது நூலாக்கப்பணி. அவரது பல நூல்கள் திருக்கோயிற் பண்பாட்டை வளம்படுத்த பெரிதும் துணைபுரிந்தன. அனுட்டானவிதி, மகோற்சவ உண்மை விளக்கம், சிவாலய தரிசன விதி, புட்ப விதி, சைவ சமய அனாச்சாரம் - திருக்கோயிற் குற்றங்கள், யாழ்ப்பாணச் சமய நிலை போன்ற நூல்கள் ஒரு சிலவாகும்.

நாவலர் பாடல் பெற்ற திருத்தலமாகிய திருக்கேதீச்சரத்தின் புனருத்தாரணம் பற்றியும் தொன்மைமிகு சிவத்தலமாகிய நகுலேச்சரத்தின் புனருத்தாரணம் பற்றியும் மக்களுக்கு எடுத்துக்கூறி ஆற்றுப்படுத்தியவர் என்பது குறிப்பிடற்பாலது.

இன்றைய நிலையில் இப்பிரதேசத்தில் கடந்த மூன்று தசாப்த காலங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட பெருமளவிலான ஆலயங்களின் திருப்பணிகள் நிறைவேறி புனருத்தாரண மகா கும்பாபிஷேகங்கள் பல்வேறு சிரமங்களின் மத்தியில் நிகழ்ந்து வருவது திருக்கோயிற் பண்பாட்டின் மறுமலர்ச்சிக்கு வழி வகுத்துள்ளது. இவ்வகையில் நகுலேச்சரத்தில் புனருத்தாரண திருப்பணிகள் பாரிய அளவில் நிறைவேறி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளமை சிவாலயப் பண்பாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளது. சமகால ஓட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் புனருத்தாரண திருப்பணி வேலைகள் பாரிய அளவில் முன்னெடுக்கப்படுகின்றமை திருக்கோயில் பண்பாட்டின் மலர்ச்சியைக் காட்டி நிற்கின்றது. அதுபோன்று பாடல் பெற்ற திருத்தலமாகிய திருக்கேதீச்சரத்தில் இந்திய அரசின் பாரிய அளவிலான நிதி அனுசரணையுடன் ஆலய திருப்பணிச் சபையினரால் புனருத்தாரண திருப்பணிகள் சிவாகம விதி முறைகளுக்கேற்ப பரந்த அளவில் தென்னிந்திய சிற்பக்கலைஞர்களது பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது. சமகால ஓட்டத்தில் இத் திருப்பணி முக்கியத்துவம் பெறுவதோடு ஆலய வரலாற்றில் மற்றுமொரு மைல் கல்லாக அமைகின்றது.

யாழ்ப்பாணத்தில் வரலாற்றுப் புகழ்மிக்கதும் பிரசித்தி பெற்றதும் ஆகிய நல்லூர் கந்தசுவாமி கோயிலில் அண்மையில் வடக்குப் புறத்திலும் அதற்கு முன் தெற்குப் புறத்திலும் வானளாவ உயர்ந்த கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை திருக்கோயிற் பண்பாட்டின் பெருமையை வானளாவ உயரச் செய்துள்ளது. நல்லைக் கந்தனின் மகோற்சவம் திருக்கோயிற் பண்பாட்டின் மகோன்னதமான வெளிப்பாடாகும். மகோற்சவத்தில் பிரமோற்சவமாகிய தேர்த்திருவிழா

அடியார்கள் மத்தியில் உன்னதமான பக்தியுணர்வையும் கலாரசனை யையும் ஏற்படுத்தி வருகின்றது. ஷண்முகப் பெருமான் அழகுமிகு கோலத்துடன் அலங்காரக் கந்தனாக தேரில் அமர்ந்து பவனிவரும் அருட்காட்சியில் மக்கள் காதலாகி கசிந்து கண்ணீர் மல்க தரிசிக்கும் காட்சி திருக்கோயிற் பண்பாட்டு எழுச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டு நல்லூர் மகோற்சவம் திருக்கோயிற் பண்பாடு உலகளாவிய பெருமை பெற சிறந்ததொரு சாதனமாக விளங்குவது குறிப்பிடற்பாலது. சமய வாழ்வில் இவ்வாலய மகோற்சவ காலப்பகுதி மக்களிடையே உயர்ந்த சமய உணர்வையும் சாதனாப் பயிற்சியையும் ஏற்படுத்தி வருவது திருக்கோயிற் பண்பாட்டின் பெருமைக்குச் சான்று. எமது பிரதேசத்தில் உள்ள மக்கள் மாத்திரமின்றி தீவடங்கிலுமுள்ள சைவப்பெருமக்கள் மற்றும் புலம் பெயர்ந்து பிறநாடுகளில் வாழும் சைவப்பெருமக்கள் எனப் பல்திறத்தவர்கள் இம் மகோற்சவத்தில் பங்கு கொண்டு சிறப்பிக்கின்றமை திருக்கோயிற் பண்பாட்டிற்குப் பெருமை சேர்க்கின்றது.

நாவலரையடுத்து சைவப் பெருவள்ளலார் சேர். பொன். இராம நாதன் இந்நாட்டில் சிவாகமஞ் சார்ந்த திருக்கோயிற் பண்பாடு மலர்ச்சி பெற ஆற்றிய பங்கும் பணியும் குறிப்பிடற்பாலது. இவருக்கு சமய ஆலோசகராகவும் குருவாகவும் விளங்கியவர் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களின் தந்தையார் சிவஸ்ரீ ந. வெ. கார்த்திகேயக் குருக்கள் என அழைக்கப்படும் தம்பையா குருக்கள் அவர்களாவர். சேர். பொன். இராமநாதன் உருவாக்கிய திருநெல்வேலியில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயம் பரமேஸ் வராக் கல்லூரியில் கல்விபயின்ற மாணவர்களது சமய நம்பிக்கை, ஒழுக்கம் ஆகியவை மேன்மையடைந்து பண்புடையவர்களாக திகழ வழிவகுத்து திருக்கோயிற் பண்பாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணை யாக விளங்கியது. இவ்வாலயம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் உன்னதமானது. 'திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய் கரு-தரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும் கருணாகரக் கடவுளே'என மாணவர்கள் வழிபட்டு கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க உறுதுணையாக விளங்கியது இவ்வாலயம். சேர். பொன். இரா-மநாதனின் உயர் இலட்சியம் ஒழுக்கமிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே பரமேஸ்வராக் கல்லூரியை

நிறுவியவர். இராமநாதன் அவர்களது தீர்க்க தரிசனத்தில் உருவாகிய பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாக கருவாக அமைந்தது. 1991 ஆம் ஆண்டு பரமேஸ்வரன் ஆலய புனருத்தாரண மகா கும்பாபிஷேகத்தையொட்டி ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை போஷகராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தராகவும் பணியாற்றிய பேராசிரியர் அ. துரை ராசா அவர்கள் கும்பாபிஷேக மலருக்கு வழங்கிய ஆசியுரையில் பரமேஸ்வரன் ஆலய பண்பாட்டுப் பெருமையையும் சேர். பொன். இராமநாதன் அவர்களது தீர்க்க தரிசனத்தையும் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளமை குறிப்பிடற்பாலது. அவர் தமது ஆசியுரையில்,

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலியில் இப்பொழுது அமைந்துள்ள இடத்தில் முன்பு பரமேஸ்வராக் கல்லூரி இயங்கி வந்தது என்பதை பலரும் அறிவர். பரமேஸ்வராக் கல்லூரியின் ஓர் இணைபிரியாதஅங்கமாக அதன் இதயக்கமலம் போன்று அக்கல்லூரி வளவினுள்ளே பரமேஸ்வரன் திருக்கோயில் விளங்கலாயிற்று அவ்வாறு கல்லூரியுடன் திருக்கோயிலையும் சேர்த்து ஒருங்கே கலைத்திட்டமிட்டு நிறுவிய பெரியார் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் நோக்கமும் கருத்தும் கோட்பாடும் சிந்திக்கப்பாலன.

நமது கல்வி மேம்பாடு பற்றி மிகுந்த சிரத்தையுடன் சிந்தித்துப் பணியாற்றிய அப்பெரியார் சமயம், கலை, பண்பாடு என்பவற்றின் பெறுமதியை கண்டு உணர்ந்த நிலையிலே பரமேஸ்வரன் திருக்கோயிலை நிறுவிப்பேணி வந்தார் எனக்கருதலாம். கல்வி பயிலும் மாணவர்கள் மரபு வழிவந்த வழிபாட்டு நெறிகளையும் விழுமியங்களையும் போற்றிப் பயிலுதல் வேண்டும் என்பது அவர்தம் குறிக்கோள் போலும்.

இன்றைய நிலையில் நமது பல்கலைக்கழகத்திற் பயிலும் இந்து மாணவர்களுக்குவேண்டிய சமயச் சார்பையும் சூழலையும் வழங்கிவரும் உன்னத நிலையமாகப் பரமேஸ்வரன் திருக்கோயில் திகழ்கிறது. இறைவழிபாடும்சமயஞ் சார்ந்த கலைகளும் புத்துயிர் பெறுவதற்கு இக்கோயில் உறுதுணையாகஅமைதல் போற்றத்தக்கதாகும்."[35]

எனக் கூறியுள்ள கருத்துக்கள் திருக்கோயிற் பண்பாட்டின் எழுச்சிக்கும் மலர்ச்சிக்கும் பரமேஸ்வரன் திருக்கோயில் மூலா தாரமாக விளங்கும் சிறப்பை நன்று எடுத்துக் காட்டுகின்றமை குறிப்பிடற்பாலது.

பரமேஸ்வரன் ஆலய புனருத்தாரண திருப்பணி 1991 ஆம் ஆண்டு இடம் பெற்றது. பரமேஸ்வரா இயக்குநர் சபையினரும் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமையிலான பல்கலைக்கழக சமூகமும் ஆலய பரிபாலன சபையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகமும் ஆலய பரிபாலன சபையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றமும் ஒன்றிணைந்து நாவலர் குறிப்பிட்ட ஒற்றுமையுணர்வுடன் திருப்பணியில் இணைந்ததன் பயனாய் இக்காரியம் கைகூடியது. பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபையின் அனுசரணையுடன் இந்து மன்றத்தின் பெரும் பொருளாளராக விளங்கிய பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களது வழிகாட்டலில் மிகுந்த ஈடுபாட்டுடன் இத்திருப்பணியை முன்னெடுத்தமை குறிப்பிடற்பாலது. 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற புனருத்தாரண மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு புதிய இராஜகோபுரம், மணிக்கோபுரம், வசந்த மண்டபம், நவக்கிரக ஆலயம், பைரவர் ஆலயம், சண்டேசுவரர் ஆலயம் முதலிய திருப்பணிகள் புதிதாக இடம்பெற்றன. பல புதிய விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.[36]

சேர். பொன். இராமநாதனின் தந்தையார் ஸ்ரீமான் பொன்னம்பலம் முதலியார் கொழும்பு கொச்சிக்கடையில் அமைந்துள்ள ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோயிலை உருவாக்கியவர் தமது மூதாதை யினரின் அரும்பணிகளைத் தொடர்ந்து சேர். பொன். இராமநாதன் இவ்வாலயத்தின் கருங்கற் திருப்பணியை முன்னெடுத்தவராவர். அவரிடம் காணப்பட்ட உயர்ந்த நோக்கு, அயராத முயற்சி, அர்ப்பணிப்பு, தன்னம்பிக்கை காரணமாக இக்கருங்கற் திருப்பணி நிறைவேறி ஆலயம் புதுப்பொலிவு பெற்றது.[37] தமிழகத்துப் பேரரசர்கள் முன்னெடுத்த ஆலயக் கட்டடக்கலை

மரபிற்கமைவாகவும் சிவாகம மரபு சார்ந்ததாகவும் இத்திருக்கோயிலை தம் சொந்த முயற்சியில் திருப்பணி மூலம் இத்திருக்கோயிலை புணர் நிர்மாணம் செய்து சிவாகமஞ் சார்ந்த திருக்கோயிற் பண்பாட்டு வளர்ச்சிக்கு அரிய பணியாற்றியவர் சேர். பொன். இராமநாதன். 1907 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற ஆலய புனர்நிர்மாணப்பணி ஏறத்தாழ 1912 ஆம் ஆண்டளவில் பூர்த்தியடைந்தது. ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் திருக்கோயில் சிவாகமஞ் சார்ந்த திருக்கோயிற் பண்பாட்டின் சின்னமாக விளங்கி வருகின்றது.

சிவஸ்ரீ ந. வெ. கார்த்திகேயக் குருக்கள் நல்லூரில் சிறப்பாக ஸ்ரீ கைலாசநாதர் கோவில் என்ற பெயரில் சிவாலயம் ஒன்றினை நிறுவி திருக்கோயில் பண்பாட்டிற்கு அரிய பணிபாற்றியவர். தஞ்சையைத் தரிசித்த சிவஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் சேர். பொன். இராமநாதன் அவர்களது சிபார்சுடன் அங்குள்ள சமஸ்தானத்தின் உதவியுடன் தமது ஆலயத்திற்குரிய மூல விக்கிரகங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடற்பாலது.

இவ்வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயம், கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் ஆலயம், நல்லூர் கைலாசநாதர் ஆலயம் ஆகியவற்றின் ஊடாக சேர். பொன். இராமநாதன் அவர்களும் சிவஸ்ரீ கார்த்திகேயக்குருக்கள் அவர்களும் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களும் சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாடு எமது நாட்டில் மலர்ச்சி பெற்று மேம்பட பங்காற்றிய பெருமைக்குரியவராவர்.

சிவஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் நல்லூரில் தாம் நிறுவிய ஆலயத்தில் சிவாகமரபுப்படி நித்திய நைமித்தியக் கிரியைகள் நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை உறுதி செய்யும் வண்ணம் தருமசாதனம் ஒன்றினை உருவாக்கியமை சிவாகமப் பண்பாட்டினைப் பேணுவதில் அவர் கொண்ட உறுதிப்பாட்டினைக் காட்டுகின்றது. அர்ச்சகாச்சாரியர் கடமை, பூசை ஒழுங்கு, பராமரிப்பு ஒழுங்குகள், அபிஷேக முறைகள், நைவேத்திய ஒழுங்கு, பரிபாலன ஒழுங்கு உற்சவாச்சாரியர்,

சாதகாச்சாரியர் கடமை, வழிபாட்டு முறை, ஆலயத்திலுள்ள சிலா தாமிர விக்கிரகங்களுக்கு மாக்காப்பிடுதல், பழக்காப்பிடுதல் முதலிய வேலைகளுக்கு அர்ச்சகாச்சாரியர் உதவுதல் போன்றவற்றை உள்ளடக்கி சிவாகமஞ் சார்ந்த ஒழுங்கு முறைகளை பதின்மூன்று அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. இது திருக்கோயிற் பண்பாடு வளம் பெற பெரிதும் உதவியுள்ளது.

**பல்கலைக்கழகங்களில் திருக்கோயிற் பண்பாடு சார்ந்த திருப்பணிகள் மற்றும் சிவாகமஞ் சார்ந்த அறிவுப்பரம்பல்**

பல்கலைக்கழகங்கள் திருக்கோயிற் பண்பாட்டு வளர்ச்சியில் கொண்டுள்ள ஈடுபாட்டினை வெளிப்படுத்துவதில் பேராதனையில் இலங்கைப் பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட குறிஞ்சிக் குமரன் கோயில் முக்கியத்துவமுடையது. இப்பல்கலைக் கழகம் அமைந்துள்ள அழகிய இயற்கைச் சூழலில் மலை சார்ந்த பிரதேசத்தில் இப்பல்கலைக்கழக பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகம், இந்து மாணவர் சங்கம், அப்பிரதேச சைவப்பெருமக்கள், சைவப் பெரியார்கள் ஆகியோர் அளித்த நல்லாதரவுடன் 1968 ஆம் ஆண்டு அனைவரும் ஒன்றிணைந்து உருவாக்கிய புதிய ஆலயமே குறிஞ்சிக்குமரன் ஆலயம். இந்து மாணவர் சங்கம் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட முருகன், வள்ளி தெய்வயானை திருவடிவங்களின் கிராம பிரதஷணம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிருந்து நடைபெற ஆர்வத்துடன் செயற்பட்டமை குறிப்பிடற்பாலது.[38] சகல உபசாரங்களுடன் நடைபெற்ற ஊர்வலம் திருக்கோயில் சார்ந்த பண்பாட்டு எழுச்சி ஊர்வலமாக இது அமைந்தது. இவ்வகையில் இப்பல்கலைக்கழகம் சிவாகமஞ் சார்ந்த திருக்கோயிற் பண்பாட்டின் வளர்ச்சிக்கு அரிய பங்களிப்பை நல்கியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய வளர்ச்சியில் மற்றுமொரு மைல் கல்லாக அமைவது புனருத்தாரண திருப்பணிகள் இடம் பெறக்கூடிய வகையில் 11.07.2016 அன்று நடைபெற்ற பாலஸ்தாபன கும்பாபிஷேகம் ஆகும். பரமேஸ்வராக் கல்லூரி

இயக்குனர் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம், கும்பாபிஷேகத் திருப்பணிச்சபை பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை ஆகியவை ஒன்றிணைந்து இப் புனருத்தாரணப் பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. பரமேஸ்வராக் கல்லூரி இயக்குனர் சபைத் தலைவர் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் அவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களும் பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தின் மூலம் திருக்கோயில் சார்ந்த புனருத்தாரண திருப்பணி வேலைகளை சுபவேளையில் ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரனின் திருவருட் துணையுடன் அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளமை இவ்வாலய வரலாற்றில் குறிப்பிடத்தக்க மற்றுமொரு நிகழ்வாகும். சிவாகமஞ் சார்ந்த திருக்கோயிற் பண்பாட்டினைப் போலும் அரிய பங்களிப்பாக இப்புனருத்தாரண திருப்பணி அமைகின்றமை குறிப்பிடற்பாலது.

யாழ் பல்கலைக்கழகத்தில் திருக்கோயில் பண்பாடு சார்ந்த ஆய்வுகள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. திருக்கோயில் சார்ந்த பண்பாட்டு அறிவு விருத்தியில் இந்து நாகரிகத்துறை பெரும் பங்காற்றி வருகின்றது. யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் முதல் இந்து நாகரிகப் பேராசிரியராக விளங்கிய பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் சிவாகமஞ் சார்ந்த திருக் கோயிற் பண்பாடு சார்ந்த அறிவு விருத்திக்கும் ஆய்வு முயற்சிகள் சிறக்கவும் அரிய பணியாற்றியவர். அவரது வழிகாட்டலில் யான் 1982 ஆம் ஆண்டு 'சிவாகமங்களும் சிற்ப சாஸ்திரங்களும் சித்தரிக்கும் சில விக்கிரகவியல்' என்ற தலைப்பில் மேற்கொண்ட கலாநிதி பட்ட ஆய்வுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முதன் முதலாகக் கலாநிதிப்பட்டம் வழங்கியமை குறிப்பிடற்பாலது. இதுவே இந்து நாகரிகத் துறையின் முதலாவது கலாநிதிப் பட்டமுமாகும். பரமேஸ் வரன் ஆலய வளாகத்தில் திகழ்ந்த பரமேஸ்வராக் கல்லூரியைக் கருவாகக் கொண்டு உருவாகிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்கிய முதலாவது கலாநிதிப்பட்டம் சிவாகமம் சார்ந்ததாகவும் சைவத்தின் முதல்வனாகிய சிவனது வடிவங்கள் பற்றியதாகவும் அமைந்ததோடு இன்றைய பேருரையில் நினைவு கூரும் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களது வழிகாட்டலில் அமைந்தமையும்

திருவருட் பேறேயாகும். ஆய்வு நிலையில் சிவாகமஞ் சார்ந்த, திருக் கோயிற் பண்பாடு சார்ந்த அறிவு விருத்திக்கு இத்தகைய முயற்சி துணை செய்கின்றது. மேலும் சிவாகமஞ் சார்ந்த சைவசித்தாந்த அறிவு விருத்திக்கு இப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீடம் நடாத்தும் சைவசித்தாந்த முதுகலைமாணி பட்டப்பின் பயிற்சி நெறி உதவி வருகின்றது. திருக்கோயில் பண்பாடு சார்ந்த பல உயர்மட்ட ஆய்வுகள் இடம் பெற்று வருவதும் இத்துறை சார்ந்த நூல்கள் வெளியிடப்பட்டு வருவதும் திருக்கோயில் சார்ந்த பண்பாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவுள்ளன. இலங்கையில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இடம் பெறும் இந்து நாகரிகப் பயிற்சி நெறிகள் மூலம் இத்துறை சார்ந்த அறிவு விருத்தி இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடற்பாலது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத் துறை யினரதும் அதன் தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் அவர்களது தலைமையில் அமைக்கப்பட்ட மகாநாட்டு செயலணியினதும் அனுசரணையில் 2016 பெப்ரவரி மாதம் 12, 13, 14 ஆகிய திகதிகளில் நடைபெற்ற அனைத்துலகச் சைவமகாநாடு குறிப்பிடத்தக்கது. சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும் என்ற கருப்பொருளில் இம்மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாட்டின் மூலம் சிவாகமஞ் சார்ந்த சைவப் பண்பாட்டின் உன்னதமான சிந்தனைகளையும் திருக்கோயிற் பண்பாட்டின் பெருமையையும் உலகறியச் செய்தமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இம்மகாநாட்டில் இடம்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளைப் படித்துப் பயன் பெறத்தக்க வகையிலும் மகாநாட்டினை நினைவு கூரும் வகையிலும் வெளியிடப்பட்ட 760 பக்கங்களைக் கொண்ட ‘ஆய்வடங்கல்’ ஆய்வுத் தொகுப்பு குறிப்பிடற்பாலது. மகாநாட்டில் பங்கு கொண்ட அறிஞர்களினதும் ஆய்வாளர்களினதும் ஆய்வுக்கட்டுரைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. சிவாகமத்தின் மேன்மையையும் அது வகுத்துக் காட்டும் பண்பாட்டின் சிறப்பையும் இவற்றால் சமூகத்தில் ஏற்பட்ட பயனையும் உலகறியச் செய்தமை பெரும் சாதனையாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர்

பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. ஞானகுமாரன் இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் மற்றும் இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் பேராசான்கள் ஆகியோ ரது கூட்டு முயற்சியில் நடந்த இந்த சிவாகமஞ் சார்ந்த அனைத்துலக மகாநாடு பல்கலைக்கழகத்தின் பெருமைக்கும் அதன் வழி திருக் கோயில் பண்பாட்டின் மலர்ச்சிக்கும் வழியமைந்துள்ளது என்பது குறிப்பிடற்பாலது. இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் இம் மகாநாட்டை சிறப்புற ஒழுங்கமைத்து வழி நடத்தியமை குறிப்பிடற்பாலது. இம் மகாநாட்டின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி. பத்மநாதன், துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், முன்னாள் துணைவேந்தர்கள் ஆகியோர் சபையில் ஒன்று கூடி கலந்து சிறப்பித்ததோடு அவர்கள் தத்தமது உரைகள் மூலம் கூறிய அறிவுரைகள் சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாடு சார்ந்த எதிர்கால மகாநாடுகளை நடத்த இந்து நாகரிகத் துறையினர்க்கு உற்சாகத்தைத் தருவதாக அமைந்தன.

இலங்கையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடந்தோறும் நடாத்தும் ஆய்வு நிலை சார்ந்த கருத்தரங்குகளில் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கல்விமான்களும் தமிழகம் மற்றும் மலேசிய நாட்டைச் சேர்ந்த கல்விமான்களும் பங்கு கொண்டு திருக்கோயில் சார்ந்த பண்பாட்டு விடயங்கள் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்து அரும்பணியாற்றி வருகின்றனர். அவற்றை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நூல் வடிவில் வருடந்தோறும் வெளியிட்டு அரும்பணியாற்றி வருகிறது. இதன் வழி திருக்கோயில் பண்பாடு சார்ந்த அறிவு விருத்திக்கு உதவி வருவது குறிப்பிடற்பாலது. பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களது சிறந்த வழிகாட்டல் இப்பணிக்கு உதவி வருகின்றமை குறிப்பிடற்பாலது.

ஊடகங்களும் திருக்கோயில் பண்பாடு சார்ந்த அறிவு விருத்திக்கு உதவி வருகின்றன. புலம் பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் சைவப் பெருமக்கள் எமது நாட்டில் சிவாகமஞ் சார்ந்த திருக்கோயில்களில் உள்ள தெய்வங்களின் பெயரால் திருக்கோயில் அமைத்து ஆகம மரபி

லான வழிபாடுகளை மேற்கொண்டு வரும் வகையில் திருக்கோயில் பண்பாடு வளம் பெற உதவி வருகின்றனர்.

திருக்கோயில் பண்பாட்டு வளர்ச்சியில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் குறிப்பிடற்பாலது. சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்கள் ஆலய பரிபாலன சபைத்தலைவராக விளங்கி ஆற்றிய பணிகள் திருக்கோயிற் பண்பாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடற்பாலது. 'மக்கள் பங்கேற்பு' என்ற விடயம் பற்றி இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். இது பற்றி பேராசிரியர் என். சண்முகலிங்கன் குறிப்பிடுமிடத்து

'மனித விருத்தியில் மக்கள் பங்கேற்பு என்பதுஇன்றியமையாததோர் அம்சமாகும். தன்னம்பிக்கைஊக்கம் ஆக்கத்திறன், பொறுப்புணர்ச்சி, கூட்டுறவுஎன்பன மேம்பட பங்கேற்றல் அடிப்படையாகின்றது'.[39]

என்ற கருத்து தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய பண்பாட்டு வளர்ச்சிக்குப் பொருத்தமாகவுள்ளது. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆலயத்தை ஆகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாடு மேம்பட வழி நடத்திய அதே சமயம் தனது ஆளுமை விருத்தியால் திருக்கோயில் பண்பாட்டில் சிறப்புப் பெறும் விஷ்ணு, துர்க்கை ஆலயத்தை மக்கள் வாழ்வியல் சிறக்க அறிமுகம் செய்த சிறப்புப் பற்றி பேராசிரியர் என். சண்முகலிங்கன் எழுதிய "துர்க்கையின் புதுமுகம்" யாழ்ப்பாணத்தில் சமயம் வழிபாடு மாற்றங்கள்" என்ற நூலின் வழி ஆய்வு பூர்வமாக எடுத்துக் கூறியுள்ளமை[40] குறிப்பிடற்பாலது. இவரது காலத்தில் துர்க்கையம்மன் ஆலயம் பெரு வளர்ச்சி கண்டது அதன் புகழ் எங்கும் பரவியது. சிவத்தமிழ்ச் செல்வி நாவலர் காட்டிய வழியில் சமயப் பணியைத் தொடர்ந்து மக்களின் வாழ்வியலை வளம்படுத்தியதோடு திருக்கோயில் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியவர். இப்பிரதேசத்தில் துர்க்கை அம்மன் கோவில்கள் எழுச்சி பெற அவரது துர்க்கையம்மன் கோவிற் பணிகள் முன்மாதிரியாக அமைந்து திருக்கோயிற் பண்பாடு வளம் பெற்றது.

தொன்மைமிகு சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாடு சமகா

லச் செல்நெறியில் பல சிக்கல்களையும் பிரச்சினைகளையும் சந்தித்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. திருக்கோயிற் திருப்பணிகள் நடைபெறும் காலத்தில் ஏற்படும் ஐயங்களைத் தெளிவுபடுத்தி விளக்கப்படுத்தும் தேவைகள் அண்மைக்காலப்போக்கில் அதிகரித்து வருகின்றன. சிவாகமங்கள் சார்ந்த விடயங்களுக்கு தெளிவு பிறப்பித்து சிவாகம மரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாடு வளம் பெறும் வகையிலும் அம்மரபு சிதையாது அடுத்த தலை முறையினர்க்குக் கொண்டு செல்லும் வகையிலும் இத்துறை சார்ந்த அறிவையும் புலமைத்துவத்தையும் மக்களிடையே ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். இதன் மூலம் ஆலயங்களில் ஏற்படும் பல்வேறு சாஸ்திர ரீதியான பிரச்சினைகளை எளிதில் புரிந்துணர்வுடன் தீர்க்க வழியேற்படும். பின்வரும் ஆலோசனைகள் திருக்கோயிற் பண்பாட்டின் சிறப்புக்கு உதவவல்லன.

1. சிவாகமஞ் சார்ந்த திருக்கோயிற் பண்பாடு காலத்தாற் சிதையாவண்ணம் பாதுகாத்து ஏற்ற வழிகாட்டல்களை வழங்குவது வரவேற்கத்தக்கது.
2. திருக்கோயிற் பண்பாட்டின் கலைக்களஞ்சியமாகிய சிவாகமங் களைப் பேணிப் பாதுகாத்தல் அவசியமாகும்.
3. திருக்கோயில் பண்பாட்டினைப் பாதுகாப்பதில் சிவாச் சாரியர்கள் ஆலய அறங்காவலர்கள், வழிபடுவோர் ஆகியோர் ஒற்றுமையும் ஒன்றிணைந்து செயற்படுதல் வரவேற்கத்தக் கதாகும்.
4. மக்களிடையே இத்துறை சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தல் பயன் தரும்.
5. இம்மரபை அடுத்த தலைமுறையினர்க்கு வழங்கும் வகையில் அறிவுப் பரம்பலை விருத்தி செய்தல் நன்று.
6. சிவாகமஞ் சார்ந்த அறிவு வளர்ச்சிக்கும் பயிற்சிக்கும் குருகு லங்கள் உதவ வேண்டும்.
7. சிவாகமஞ் சார்ந்த ஆய்வுகள் இடம்பெற வேண்டும்.

8. கல்விமான்களும் சமயத்தலைவர்களும் சமூகத்தலைவர்களும் ஆர்வமுடன் வற்புறுத்தி வரும் உயர்நிலை சார்ந்த வழி காட்டல்களை வழங்கக் கூடிய சிவாகமஞ் சார்ந்த புலமைத்துவ சபை ஒன்று உருவாக்கப்படுதல் காலத்தின் கட்டாயத் தேவை யாகும்.
9. இச்சபையின் அறிவுரைகள் ஆலோசனைகள் வழிகாட்டல் போன்றவற்றை சம்பந்தப்பட்டவர்கள் கருத்திற் கொண்டு திருக்கோயிற் பண்பாடு வளம்பெற உதவ வேண்டும்.

இத்தகைய ஆலோசனைகள் சிவாகமஞ் சார்ந்த திருக்கோயிற் பண்பாடு தொடர்பான விடயங்களுக்கு பெரிதும் வழிகாட்டக் கூடியதோடு அப்பண்பாடு வளம் பெறவும் உதவக்கூடியன.

இத்தகைய சிறப்பு மிக்க சிவாகமமரபு சார்ந்த திருக்கோயிற் பண்பாடு - தொன்மையும் சமகால செல்நெறியும் என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்ட இந்த நினைவுப்பேருரை திருக்கோயிற் பண்பாடு உலகளாவிய நிலையில் மேன்மை பெற பேராசிரியர் என்ற நிலையிலும் சிவாச்சாரியர் என்ற நிலையிலும் அரிய பணியாற்றிய எமது குருநாதர் பேராசிரியர் இலக்கிய கலாநிதி சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களுக்கு நாம் செலுத்தும் குரு காணிக்கையாக அமைவதாகுக.

இவ்வரிய வாய்ப்பை எனக்கு உவந்தளித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மதிப்பார்ந்த துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களுக்கும் கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. ஞானகுமாரன் அவர்களுக்கும் பல்கலைக்கழகப் பதிவாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கும் இப்பேருரையை ஆற்றவேண்டும் என அன்புடன் என்னைக் கேட்டுக் கொண்ட சம்ஸ்கிருதத் துறைத் தலைவர் பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன் அவர்களுக்கும் இந் நினைவுப் பேருரையை அமைதியுடன் செவிமடுத்த சபையோருக்கும் எனது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன்.

## அடிக்குறிப்புகள்

1. கைலாசபிள்ளை, த. **நாவலர் சரித்திரம்**, *1916*, பக். *43*.
2. I. கோபாலகிருஷ்ண ஐயர், ப., **இந்து விக்கிரகக் கலை மரபில் சிவ வடிவங்கள்**, *2010*, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, பக். *27*.
   II. கோபாலகிருஷ்ண ஐயர்., ப. **இந்து பண்பாட்டு மரபுகள்** *1962*, வித்தியா வெளியீடு, யாழ்ப்பாணம் பக். *17*.
3. மகாதேவன், டி, எம். பி., **இந்து சமயத்தத்துவம்**, *1964* தமிழ் வெளியீட்டுக்கழகம், சென்னை, பக். *164*.
4. **காமிகாகமம்** I. 1. 29.
5. **காரணாகமம்**, II. I. 81 - 83 அ.
6. **திருமந்திரம்**, *1993*, மௌனாச்சிரமம், கொழும்பு, *183, 35*.
7. **திருவாசகம்**, *2. 9 - 10*.
8. I. காந்திமதி நாதபிள்ளை, வி. பி. , **சிவஞானபோத சொற் பொழிவு நூல்** *1960*, கழக வெளியீடு, சென்னை, பக். *3*.
   II. முத்துராமன், **சைவசித்தாந்தம்** *1975*, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், தமிழ்நாடு, பக். *24 ; 85*.
9. **மணிமேகலை**, *27. 43*.
10. கோபாலகிருஷ்ண ஐயர், ப. மே. கு. நூ. *2010*, பக். *30*.
11. சபாரத்தினம் எஸ். பி., **சைவ ஆகமங்கள் – ஓர் அறிமுகம்**, *1994* திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பக். *16*
12. **திருவாசகம், 1. 4.**
13. **South Indian Inscription**, Vol I. No 25.
14. மேலது No : *24*.
15. **சம்பந்தர் தேவாரம்**, III. 23.6.
16. மேலது, III, *39. 2*.
17. **அப்பர் தேவாரம்**, V, 15. 4.
18. **சுந்தரர் தேவாரம்**, VII. 84. 8.
19. மேலது, VII. 96 . 6.
20. மேலது, VII. 100.8.
21. சண்முகலிங்கன், கலாநிதி என்., **மரபுகளும் மாற்றங்களும்**, *2001*, நாகலிங்க நூலாலயம், யாழ்ப்பாணம், பக். *20-21*.
22. **அப்பர் தேவாரம்**, தனித்திருத்தாண்டகம், *5*.

23. மேலது, அடைவுத் திருத்தாண்டகம்.
24. மேலது, திருச்சிற்றம்பலம்.
25. **திருமந்திரம்**, *1993, 140* - சிவபூசை, பாடல் *1823.*
26. பத்மநாதன், பேராசிரியர், சிர் இரகுநாதன், க. , **சோழப் பேரரசும் சமயப் பெருநெறிகளும்**, *2009*, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, பதிப்பாசிரியர் உரை, பக். XVII
27. **திருமந்திரம்,** *1993,* பாடல் *1585.*
28. கோபாலகிருஷ்ண ஐயர், ப, *1992,* பக் *107 - 108.*
29. கைலாசநாதக் குருக்கள், பேராசிரியர், பிரம்மஸ்ரீ கா, **சைவத் திருக்கோயிற் கிரியை நெறி**, *2009,* பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் ஞாபகார்த்த சபை, நல்லூர், பக். *6.*
30. **நாவலர் நூற்றாண்டு மலர்**, *1979,* ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை வெளியீடு, கொழும்பு, பக். *233.*
31. கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ ஐ., **ஆகமாமிர்த வர்ஷிணி** *1972,* விவேகானந்த அச்சகம் யாழ்ப்பாணம்.
32. ஆத்மநாத சர்மா, பிரம்மஸ்ரீ கா. வை, **விநாயகர் மகோற்சவ விளக்கம்**, *2* ஆம் பதி, *2015.*, மதிகலர்ஸ், நல்லூர், முன்னுரை.
33. **அப்பர் தேவாரம்**, தனித்திருத்தாண்டகம், பாடல் *5.*
34. கனகரத்தின உபாத்தியாயர், **வே, ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம்**, *1968,* சுன்னாகம் திருமகள் அழுத்தகம், குரும்பசிட்டி, பக். *83–84.*
35. **பரமேஸ்வரம்**, ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய மகா கும்பாபிஷேக மலர், *1991,* யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, ஆசியுரை.
36. மேலது, பக். *17.*
37. சுபாஷினி பத்மநாதன், கொழும்பு ஸ்ரீ **பொன்னம்பலவாணேஸ்வரர் திருத்தலம்**, *2012,* எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட், கொழும்பு,
பக். *26-30*
38. **இந்து தருமம்,** சிறப்பிதழ், *1968* பேராதனை இலங்கை பல்கலைக்கழக முருகன் ஆலய கும்பாபிஷேக மலர், இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை, பக் . *84,* பக். *90.*
39. சண்முகலிங்கன், கலாநிதி என். மு. கு. நூ. *2001,* பக். *40.*
40. சண்முகலிங்கன் பேராசிரியர், கலாநிதி என், **துர்க்கையின் புதுமுகம்** *2013,* சாந்தி பதிப்பகம் சென்னை, பக் . *83.*



பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் பேராதனை யில் உள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்திலே சம்ஸ்கிருத மொழியைச் சிறப்புப் பாடமாகப் பயின்று முதலாம் பிரிவில் பட்டதாரியானார். 1969-1971 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சம்ஸ்கிருதத்துறையில் விரிவுரையாளரா கப் பணியாற்றியவர். 1972 ஆம் ஆண்டு முதல் திட்டமிடல் வேலை வாய்ப்பு அமைச்சில் திட்ட மிடல் அதிகாரியாகப் பணியாற்றியவர். பின்னர் 1975 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே இந்து நாகரிகத் துறையில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார். 1982 ஆம் ஆண்டு தமது கலாநிதிப்பட்டத்திற்கான ஆய்வினை பேராசிரியர் இலக்கிய கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களின் வழிகாட்டலில் சிவாகமங்களும் சிற்ப சாஸ்திரங்களும் சித்திரிக்கும் சிவ விக்கிரகவியல் என்ற தலைப்பில் மேற்கொண்டு கலாநிதி பட்டம் பெற்றவர். இவர் 1982 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முதன்முதலாக வழங்கிய கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றவர் என்பது குறிப்பிடற்பாலது. இந்துநாகரிகத் துறையிலும் இதுவே முதலாவது கலாநிதிப் பட்டமாகும்.

1995 ஆம் ஆண்டு இந்துநாகரிகப் பேராசிரியராகப் நியமனம் பெற்றார். சம்ஸ்கிருத இலக்கிய வரிசையில் சிறப்பாக ஆகமஞ் சார்ந்த ஆய்வுகளில் ஆழ்ந்த ஈடுபாடுடையவர். 1991-1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்திலே உயர் புலமைப்பரிசில் பெற்று அங்கு இந்து சமயம், கலைகள், ஒப்பியல்சமயம், சைவசித்தாந்தம் தொடர்பான ஆய்விலும் கற்பித்தலிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். அங்குள்ள பல்கலைக் கழகங்களில் அதிதி விரிவுரைகள் ஆற்றியும் உயர் கருத்தரங்குகளில் பங்கு கொண்டும் அப்பல்கலைக்கழக அறிஞர்களது பாராட்டினைப் பெற்றவர். இந்து நாகரிகம் சார்ந்த பல நூல்களின் ஆசிரியராவார். மேலும் உள்நாட்டு வெளிநாட்டு ஆய்வுச் சஞ்சிகைகளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரை களை வெளியிட்டுள்ள இவர் சிறந்த சொற்பொழிவாளர் ஆவார். 1986 ஆம் ஆண்டு முதல் இந்து நாகரிகத்துறைத் தலைவராக 15 வருடங்களாக அத்துறையை வழிநடத்தியவர். 2001 ஆம் ஆண்டு கலைப்பீடச் சபையினால் கலைப்பீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவாகி அப்பீடத்தை நெறிப் படுத்தியவர் பல தடவைகள் பதில் துணை வேந்தராகவும் பணியாற்றியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமனம் பெற்றுப் பல வருடங்கள் பணியாற்றியவர். 30 வருட காலத்திற்கு மேலாக பல்கலைக்கழகத்தில் கல்விப் பணியாற்றி 2004 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றவர். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு வாழ்நாள் பேராசிரியர் (Emeritus Professor) என்ற அந்தஸ்து வழங்கி கௌரவித்துள்ளது. இவரது துறைசார் புலமைத்துவம் ஆய்வுத்துறை, கல்வி நிர்வாக மேம்பாடு, உயர்கல்வி வளர்ச்சி ஆகிய துறைகளில் இவர் ஆற்றிய பணிகளைப் பாராட்டி 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுப் பட்டமளிப்பு விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.